Acc. No. 1631/73.
22 NOV 1973
11797/55
263

# குடும்பநலச் செய்திக்கதிர்

மலர்-3
இதழ்-6
அக்டோபர்-1973

தமிழ்நாடு குடும்பநலத்துறை வெளியீடு

# நீலகிரி மாவட்ட மக்கள் தொகையியல் கல்விக் கருத்தரங்கு

## உதகையில் பேராசிரியர் துவக்கிவைத்தார்

நீலகிரி மாவட்ட மக்கள் தொகை இயல் கல்விக் கருத்தரங்கம், கடந்த 14-9-73 அன்று உதகையில் சிறப்புற நடந்தேறியது. தமிழ் நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் கருத்தரங்கினைத் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

உதகை ஊராட்சி ஒன்றிய அலுவலகக்கட்டிடத்தில் இக்கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கை முன்னிட்டு, ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடம் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. வாயிலின் இருமருங்கிலும் வரிசையாக வண்ணக்கொடிகள் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தன. நுழைவாயிலில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய தோரணவாயில் அமைக்கப் பட்டிருந்தது.

விழாவுக்கு வருகை தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாணவிகள் பூர்ணகும்ப மரியாதை யுடன் வரவேற்றனர். அமைச்சர், கருத்தரங்க வாயிலை வந்தடைந்த போது இரு மருங்கிலும் மாணவிகள் கையில் பூத்தட்டுக்களை ஏந்தி நின்றவாறு மலர்மாரி பொழிந்து வரவேற்றனர்.

அமைச்சர் அவர்களுடன், மக்கள் நல்வாழ்வுத்துறை இயக்குநர் டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. முத்துசாமி அவர்களும் வந்து கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

குடும்பநலத் துறைத் துணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் டி. எம். லிங்கையா, குடும்பநலத் துறைவிளம்பரத் துணை இயக்குநர் திரு. பூ. கணேசன், நீலகிரி மாவட்டக்குடும்பநலத் துறைஅதிகாரி டாக்டர் அய்யாசாமி, மாவட்டக் குடும்பநலத்துறை விளம்பர அலுவலர் திரு. சம்பந்தம், கோவை-நீலகிரி மாவட்டக் கள விளம்பர அலுவலர் திரு. பெருமாள் ஆகியோர் அமைச்சர் அவர்களையும், இயக்குநர் அவர்களையும் எதிர் கொண்டு வரவேற்று, மேடைக்கு அழைத்துச் சென்றனர்.



நீலகிரி மாவட்ட மக்கள் தொகையியல் கல்விக் கருத்தரங்கிற்கு வருகை தரும் பேராசிரியர் அவர்களை, மாணவிகள் மலர்தூவி பூர்ணகும்ப மரியாதை யுடன் வரவேற்கிறார்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் கருத்தரங்கம் தொடங்கியது. நீலகிரி மாவட்டக் குடும்பநல விளம்பர அலுவலர் திரு. ஆர். கே. சம்பந்தம் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

அடுத்து, குடும்பநலத்துறை விளம்பரத் துணை இயக்குநர் திரு. பூ. கணேசன் அவர்கள் கருத்தரங்கின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. பி. முத்துசாமி, ஐ.ஏ.எஸ். அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமையேற்று உரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கி வைத்து அரியதொரு சொற்பொழிவாற்றினார்.

அடுத்து, கோவை முதன்மைக் கல்வி அலுவலர் திரு. மகாதேவன் மக்கள் தொகை இயல் கல்வியின் அவசியம் குறித்து விளக்கவுரையாற்றினார். இத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

பிற்பகல் 3-மணியளவில் மீண்டும் நிகழ்ச்சிகள் தொடங்கி நடைபெற்றன. பிற்பகல் நிகழ்ச்சிக்கு உதகை கலைக்கல்லூரிப் பொருளாதாரத்துறைத் தலைமைப் பேராசிரியர் திரு. என். எம். விசுவநாதன் தலைமைதாங்கி உரையாற்றினார்.

மாநிலக் குடும்பநலத்துறைத் துணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் டி. எம். லிங்கையா, மாநிலக் குடும்பநலத்துறைச் செயலகத்தைச் சேர்ந்த மக்கள் தொகை புள்ளி விவர இயல் அலுவலர் திரு. எம். கே. ராம், மாநில நல்வாழ்வுக்கல்வி அலுவலர் திரு. ஜி. இராசமாணிக்கம் ஆகியோர் தனித்தனித் தலைப்புகளின் கீழ் கருத்துரை வழங்கினர்.

பின்னர் குழு விவாதம் தொடங்கியது. கருத்தரங்கில் கலந்து கொண்ட உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களும், அடிப்படைக் கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களின் தலைமை ஆசிரியர்களும் குழுக்களாகப் பிரிந்து ஆலோசனைகள் நடத்தினர்.

## "என் பிடிவாதத்துக்குக் காரணம்....."

வட ஆர்க்காடு மாவட்டம் செய்யாறு நகரில், கடந்த 9-9-1973-அன்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் தலைமையில் ஒரு திருமணம் நடைபெற்றது. கலைஞர் தமது தலைமை உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார் :—

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்று, இந்தியாவுக்கு ஏதோ தாங்க முடியாத ஆபத்து வந்துள்ளது போலவும், அந்த ஆபத்தை நீக்க மக்கள் உற்பத்தி அதிகமாக இருந்தால்தான் முடியும் என்பது போலவும் நினைத்து மக்கள் தொகையை நாளுக்குநாள் பெருக்கிக் கொண்டே வருகின்றார்கள். இப்படிப் பட்டவர்களால்தான் உண்மையிலேயே ஆபத்து ஏற்படுகிறது.

என்னைத் திருமணத்துக்குத் தலைமை தாங்க வரவேண்டும் என்று பிடிவாதமாக அழைப்பவர்களிடம், நானும் பிடிவாதமாக இருப்பதுண்டு. ஆறு மாதம் பொறுத்து, எட்டு மாதம் பொறுத்து, ஏன் ஓராண்டு பொறுத்துக்கூடத் தேதி தருவதுண்டு.

என்னுடைய பிடிவாதத்துக்குக் காரணம், அப்படியாவது பிறக்கும் குழந்தை ஓராண்டுக் காலத்திற்குத் தள்ளிப் போகாதா என்பதுதான்.

இவ்வாறு முதல்வர் கூறியதும் குழுமியிருந்தவர்கள் கையொலி எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

திருமண விழா நடைபெற்ற மண்டபத்தைச் சுற்றிலும், மாவட்டக் குடும்பநலச் செயலகத்தின் சார்பில் குடும்பநலப் பொன்மொழிகள் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

தகவல் : எஸ். அப்பர் சுந்தரம்

மாலை 4-மணிக்கு குடும்பநலத் துறைத் துணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் லிங்கையா தலைமையில் உதகை எமரால்டு ஹைட்ஸ் கல்லூரி முதல்வர் செல்வி பி. ஆதிசேஷையா சிறப்புரையாற்றினார்.

இறுதியாக, நீலகிரி மாவட்டக் குடும்பநல விளம்பர அலுவலர் திரு. ஆர். கே. சம்பந்தம் நன்றியுரையாற்றினார். இத்துடன் கருத்தரங்கம் இனிது முடிவுற்றது.

தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் நடைபெற்று வந்த மக்கள் தொகையியல் கல்விக்கருத்தரங்குகளில் இது கடைசிக் கருத்தரங்காகும். முதன்முதலாக சென்னையில் மாவட்டக் கருத்தரங்கு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டமாக நடைபெற்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள், ஆதாரப் பயிற்சிப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் இக்கருத்தரங்குகளில் ஆர்வத்துடன் வந்து கலந்து கொண்டு, விவாதித்து, பல்வேறு கருத்துரைகளை வழங்கியும், ஆய்வுரைகளைப் பெற்றும் சிறப்பித்துள்ளனர்.

மக்கள் தொகையியல் கல்விக் கருத்தரங்குகளை மாவட்டந்தோறும் கூட்டும்பொறுப்பை, மாநிலக் குடும்பநலத்துறைச் செயலகம் ஏற்றுக்கொண்டு ஆங்காங்கு வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறது. மாநில நல்வாழ்வுக் கல்வி அலுவலர் திரு. ஜி. இராசமாணிக்கம், இக்கருத்தரங்குகளை நடத்துவதில் முன்னின்று பணியாற்றினார்.

—மா.செ

# பஞ்சத்திலே அடிபடுவதற்கா அதிகப் பிள்ளைகள்?

## அரசம்பட்டு விழாவில் பேராசிரியர் கேள்வி

**"இன்றுள்ள நிலைமையில் மக்கள் தொகைப் பெருக்கம் நீடிக்குமானால் நம்முடைய இனம்—நமது மக்கள்—நமது பரம்பரை, மிகவும் கஷ்டப்படுகிற—துன்பத்துக்கு ஆளாகிற ஒரு காலம் வரும். நமது பேரன் பேத்தி காலத்திலே அவர்களெல்லாம் கஷ்டப்படுவார்கள். அந்தக் கஷ்டம் அதிகரிக்காமல் இருக்க வேண்டுமானால், இன்றைக்குத் திருமண வாழ்க்கை நடத்துகிற—கணவன் மனைவியாக இருக்கிற எல்லோரும் குடும்பத்தை அளவாக வைத்துக்கொள்ள வேண்டும்" என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், ஆயிரக் கணக்கில் குழுமியிருந்த கிராம மக்களிடையே உரையாற்றுகையில் கேட்டுக் கொண்டார்.**

வட ஆர்க்காடு மாவட்டம் அரசம்பட்டுக் கிராமத்தில் 26-7-73 அன்று நடந்த மகப்பேறு இல்லத் திறப்பு விழாவில் பேராசிரியர் அவர்கள் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பேராசிரியர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

அரசம்பட்டுக் கிராமத்தில், தாய்மார்களின் நலத்தைக் காப்பாற்றுவதற்காகக்கட்டிமுடிக்கப்பட்டுள்ள இந்த மகப்பேறு கிளை நிலையத்தைத் திறந்துவைப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். இந்த மகப்பேறு கிளை நிலையம் ஏறத்தாழ ஒன்பதாயிரம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டிருப்பதோடு, இதற்கான மகப்பேறு மருத்துவப் பயிற்சி பெற்ற அம்மையார் ஒருவரும் எப்போதும் இங்கு இருந்து, எந்த நேரத்திலும், பிரசவங்களைக் கவனிப்பது மட்டுமல்லாது, பிரசவத்துக்கு முன்னாலே, தாய்மார்கள் கர்ப்பவதியாக இருக்கிற காலத்திலும், அவர்களுக்குத் தேவையான மருந்துகளைக் கொடுக்கவும், சிகிச்சை செய்யவும், அதேபோல குழந்தை பிறந்ததற்குப் பின்னும் அந்தக் குழந்தைகளைப் பாதுகாக்கத் தேவையான மருந்துகளையும், சிகிச்சைகளையும் டாக்டர் மூலமாக வழங்கவும் உதவி செய்வார்கள்.

இந்தக் கிளை மருத்துவமனைக்கு கொழப்பலூரிலே உள்ள டாக்டர், வாரத்திலே ஒரு நாளைக்கு, கூடுமானவரை வந்திருந்து, அவர் வருகிற நேரத்தை முன்கூட்டியே தெரிவித்து, அவர் வந்திருக்கும் நேரத்தில் இங்குள்ள தாய்மார்களுக்குத் தேவையான மருந்துகளையும், சத்துணவு மாத்திரைகளையும் கூட வழங்குவார்.

எனவே, இந்த மகப்பேறு மருத்துவநிலையத்தை, இந்த வட்டாரத்திலே உள்ள தாய்மார்கள் எல்லாம், தங்களுக்குக் கிடைத்த நல்ல பலன் என்று கருதுவது இயற்கையாகும். ஆனால் இப்படியெல்லாம் குழந்தை பிறப்பதைக் கவனிப்பதற்கு—குழந்தை பிறப்பதற்கு முன்னாலே கர்ப்பவதியாக இருக்கிற பெண்ணுக்கு உதவி செய்ய—குழந்தை பிறந்ததற்குப் பின்னாலே குழந்தை வளர—அதற்கு உதவி செய்ய இவ்வளவு ஏற்பாடுகள் செய்கிறோமே, ஆகவே எவ்வளவு பிள்ளை பிறந்தாலும் கவலை இல்லை என்று யாராவது கருதுவார்களேயானால், அவர்கள் உள்ளபடியே ஏமாந்தவர்கள்—தவறான எண்ணம்



அரசம்பட்டு மகப்பேறு இல்லத் திறப்புவிழாவில், பேராசிரியர் உரையாற்றுகிறார்.

159879



பெரிய கொழப்பலூர் ஆரம்பச் சுகாதார நிலையத் திறப்புவிழாவில், பேராசிரியர் சிறப்புரையாற்றுகிறார். புலவர் கோவிந்தன், திரு. விசுவநாதன், எம். பி. முதலியோர் மேடையில் அமர்ந்துள்ளனர்.

கொண்டவர்கள்—என்றுதான் சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன்.

இந்தக் கிராமம் மிகச்சிறிய கிராமம் என்று சட்டமன்ற உறுப்பினர் எட்டியப்பன் என்னிடத்திலே சொல்லி, எல்லாவற்றையும் ஐந்து நிமிடத்திலே முடித்து விட்டு வந்துவிடலாம் என்று கூறி, எங்களை இங்கு அழைத்து வந்தார்.

இங்கே வந்து பார்த்தபோது, இவ்வளவு பேர் கூடியிருக்கிற இந்தக் கிராமத்தைச் "சிறிய கிராமம்" என்று எப்படிச் சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை.

ஒருவேளை எட்டியப்பன் இளைஞராக இருந்தபோது, இது சிறிய கிராமமாக இருந்து, ஒரு ஐம்பது பேர் இருந்திருப்பீர்கள். இப்பொழுது—ஒரு பதினைந்து இருபது ஆண்டுக்காலத்தில், கிராமத்தை எப்படிப் பெருக்கலாம் என்று நீங்கள் திட்டம் போட்டு, வீட்டுக்குவீடு அந்தத் திட்டத்தின் பலனாக இன்றையத்தினம் நெருக்கமாக இருக்கிற அளவுக்கு, இருக்க இடம் காணாமல்—பள்ளிக்கூடத்திலும் இடம் காணாத அளவுக்குப் பெருக்கியிருக்கிறீர்கள்.

வயலிலே பாடுபட்டு, நெல் வீட்டுக்கு வந்து சேர்ந்திருந்தாலும், அந்த நெல்லும் வீட்டுக்குக் காணாது. நம்முடைய வருமானத்திலிருந்து நம்முடைய குழந்தைகளைக் காப்பாற்ற முடியாத அளவுக்கு, குடும்பங்கள் எல்லாம் பெரியவையாகி விட்டன என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

நீங்கள் நினைக்கலாம்—நம்முடைய வீட்டில் நான்கு பிள்ளைகள் இருப்பதற்குப் பதில் ஆறு பிள்ளைகள் இருந்தால் யாருக்கு என்ன? நாமல்லவா பெற்றெடுத்தோம்? நாமல்லவா கஷ்டப்பட்டு வளர்க்கிறோம்? இதில் யார் தலையிடுவது? என்று கேட்கலாம். ஆனால் பல பேருக்கு உண்மை தெரியாது.

இரண்டே இரண்டு பிள்ளையைப் பெற்றெடுத்த தாயைப் பார்த்தால், ஐம்பது வயதானாலும் இளமை குன்றாமல் உடம்பு வலிவோடு இருப்பார். அவரால் பிள்ளையையும் காப்பாற்ற முடியும்; குடும்பத்தையும் கட்டிக்காக்க முடியும். ஏழெட்டுப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த ஒரு தாயைப் பார்த்தால் இளைத்துப்போய், குடும்பத்தை நடத்த முடியாமல், அதோடு நோயாளியாகி கஷ்டப்படுவார். குழந்தைகளைக் குறைவாகப் பெற்றெடுத்த ஒரு தாய்க்குக் கிடைக்கிற அந்த நல்ல வாய்ப்பு, அதிகக் குழந்தைகளைப் பெற்றெடுத்த ஒரு தாய்க்கு இல்லை.

அதேபோல இரண்டே பிள்ளைகள் பிறந்திருக்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள்—அந்தப் பிள்ளைகளுக்கு நல்ல உணவு கிடைக்கும். அந்தப்பிள்ளைகளைப் படிக்கவைக்க எவ்வளவு செலவானாலும் கவலையில்லை. ஏதோ தங்களால் முடிந்ததையெல்லாம் அந்தப் பிள்ளைகளுக்குச் செய்வார்கள். ஏழுபிள்ளை பிறந்த வீட்டிலே ஐந்து பெண்கள், இரண்டு பிள்ளைகள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு பெண்ணையும் திருமணம் செய்து கொடுக்கும் போதெல்லாம், தாயார் தனது கழுத்தில் இருக்கிற நகைகளையெல்லாம் விற்று, தான் வைத்திருந்த புடவைகளிலே ஒன்றைக் கொடுத்து அனுப்புவார். அப்புறம் தாய் கர்ப்பவதியாக இருக்கிற காலத்தில் பெண்ணும் கர்ப்பவதியாகி வீட்டுக்கு வந்தால் நிலை என்ன? இரண்டு பேருக்கும் கஷ்டம்!

பலஇடங்களிலே முன்பெல்லாம் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தால், மூன்று மாதத்துக்கு ஒருமுறை தாய் வீட்டுக்கு அழைத்து வருவார்கள். இப்போதெல்லாம் அப்படி அழைப்பது இல்லை. ஏன் என்று கேட்டால், 'நானே கஷ்டப்படுகிறேன். பெண்ணையும் அழைத்து வந்து நான் என்ன செய்வது?' என்று தாய் கூறுவார். சரி, மாமியாராவது கவனிக்க முடிகிறதா என்றால், அவளும் முழுகாமல் கர்ப்பவதியாக இருக்கும்போது மருமகளை எங்கே கவனிப்பது?

ஆக, இந்த நாட்டிலே இருக்கிற நெருக்கடியில்,மாமியார்,மருமகள், கொழுந்தியாள், ஒப்புடையாள், தங்கை, அக்காள் எல்லோரும் சேர்ந்து ஒரே இடத்துக்குப் பிரசவத்துக்கு வந்தால், இங்கேயுள்ள மருத்துவ நிலையத்தில் இடம் இருக்காது! மருத்துவம் பார்ப்பவர்களும் விடுமுறை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள்! ஒவ்வொருவராக வந்தால்தான் இடம் இருக்கும். இந்த மாதம் இரண்டு பேர்,அடுத்த மாதம் இரண்டு பேர் என்று வந்தால்தான் கவனிக்க முடியும்! ஆகவே இப்படிப்பட்ட நிலைமையில் எங்கே போனாலும் நெருக்கடி. பஸ்ஸிற்குப் போனாலும் நெருக்கடி—கல்யாண வீட்டுக்குப் போனாலும் நெருக்கடி! ஐந்தாறு பிள்ளை இருப்பவன் ஒரு கல்யாணத்துக்குப் போனால் இவர்களுக்குப் படுக்கவே அங்கே இடமில்லை. ஒரே பிள்ளை இருக்கிறவர் போனால், வாருங்க! வாருங்க!! என்று வரவேற்பார்கள். ஐந்தாறு பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போனால். ஏன் வந்தீர்கள் என்று கேட்பார்கள்.



265

நாமெல்லாம் நமது தலைவிதியை நினைத்துக் கொண்டிருக்கிறோம். கடவுள் செயல் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். மேனாட்டுக்காரர்கள் விஞ்ஞான முறையில் கண்டுபிடித்துள்ள முறையில், இரண்டு பிள்ளை பிறந்த பிறகு, கணவன் மனைவி இன்பமாக இருந்தாலும் குழந்தை பிறக்காது.

இன்றைக்குக் கூட நமது நாட்டில் இருக்கிற பெரிய பணக்காரர்கள்—இலட்சாதிபதிகள் எல்லாம் இரண்டு, மூன்று பிள்ளைகளுக்கு மேல் பெறுவது இல்லை. பெரிய அதிகாரிகள், கலெக்டர் போன்ற பெரிய உத்தியோகத்தில் இருப்பவர்கள், இரண்டுக்கு மேல் பெறுவது கிடையாது. பெரிய டாக்டர் என்றால் அவருக்கு இரண்டு பிள்ளைக்கு மேல் கிடையாது. பெரிய எஞ்சினீயர் என்றால், இரண்டு, மூன்று பிள்ளைகளோடு நிறுத்திக் கொள்கிறார். ஆரம்பப் பள்ளிக்கூடத்து ஆசிரியர் என்றால் அவருக்கு ஆறு பிள்ளைகள்! ஏனய்யா என்று கேட்டால், நான்தான் பள்ளிக்கூடத்திலே முப்பது பிள்ளைகளுக்குப் பாடம் நடத்துகிறேனே—வீட்டிலே ஐந்தாறு பிள்ளைகள் இருந்தால்தான் ஓய்வு நேரத்தில் பாடம் நடத்தலாம் என்கிறார்!

மாவட்டப் பெரிய போலீஸ் அதிகாரிக்கு இரண்டு பிள்ளை. போலீஸ்காரருக்கு எத்தனை பிள்ளை என்றால்—ஏழு பிள்ளை! இல்லை—இல்லை;—ஒன்று விட்டுப் போய் விட்டது—எட்டுப் பிள்ளை என்கிறார்! கலெக்டருக்கு இரண்டு அல்லது மூன்று பிள்ளை—கிராம உத்தியோகஸ்தரைக் கேட்டால், ஆறு பிள்ளை, ஏழு பிள்ளை என்கிறார்.

யார் அதிகமாகச் சம்பாதிக்கிறார்களோ அவர்களுக்குப் பணத்தைப் பங்கிடுவதன் அருமை தெரிகிறது—பணத்தின் அருமை தெரிகிறது. நமக்கிருக்கிற வருமானத்திலே இரண்டு பிள்ளை பெற்றால் போதும் என்று கருதுகிறார்கள். யார் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லையோ, அவன் இன்னும் இரண்டு மூன்று என்று பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறான்!

ஆகவே, இந்த நாட்டிலே பஞ்சத்திலே அடிபடுவதற்குத்தான் பிள்ளையே தவிர, வாழவைப்பதற்காகப் பிள்ளை பெறவில்லை. இன்னும் சொல்லப் போனால் இரண்டு மூன்று பிள்ளை பெற்ற ஒரு குடும்பத்திலே அந்தப் பிள்ளைகளுக்கு அடிக்கடி நோய் வராது. இருபது வயதில் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் ஆகி, 24 வயதிலே ஒரு குழந்தைபிறந்து, 30 வயதிலே ஒரு குழந்தை பிறந்து, 35 வயதிலே ஒரு குழந்தை பிறந்தது என்றால்—அந்தத் தாய் மாதிரியே அந்தக் குழந்தையின் உடம்பும் நன்றாக இருக்கும்.

பதினெட்டு வயதிலேயே முதல் பிள்ளை பிறந்து, இருபது வயதுக்குள்ளேயே—பத்தொன்பது வயதிலேயே இன்னொரு குழந்தை பிறந்து, அப்புறம் இருபத்து ஒன்றிலே ஒன்று, இருபத்து மூன்றிலே ஒன்று. இருபத்து ஐந்திலே ஒன்று என்று 25 வயதுக்குள்ளே ஐந்து பிள்ளைகள் பிறந்தால், அந்த ஐந்து பிள்ளைகளும் நோய் வாய்ப்படுகின்றன. அடிக்கடி காய்ச்சல் வரும்; கண் பார்வை மங்கும். கிராமங்களிலே நீங்கள் பார்த்தால் தெரியும். சில பிள்ளைகளுக்குத் தொழு நோய்க்கான அடையாளங்கள் கூட இருக்கும்.

சேத்துப்பட்டிலே இருக்கிற வெள்ளைக்காரர்களுடைய மருத்துவமனையில், நமது நாட்டு மக்களுக்கு வருகிற தொழு நோய்க்குச் சிகிச்சையளிக்கிறார்கள். அந்தத்தொழுநோய்க்கு சிகிச்சையளிக்க, கிராமம் கிராமமாகச் செல்ல நல்ல பயிற்சி பெற்ற ஊழியர்களை வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் ஒவ்வொரு கிராமத்திலேயும் பத்துக் குழந்தைகளுக்காவது இந்த மாதிரியான நோய் அறிகுறி இருக்கிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரு கிராமத்திலே நூறு வீடு இருந்தால், அறுபது வீடுகளில் உள்ளவர்களுக்குத் தொழுநோய் அறிகுறி இருக்கிறது. இப்படி ஒரு நிலைமை இந்த நாட்டிலே வளர்ந்தால் நம்முடைய இனம் நமது மக்கள், நமது பரம்பரை, மிகவும் கஷ்டப்படுகிற—துன்பத்துக்கு ஆளாகிற—ஒரு காலம் வரும்.

நாம்—இன்றைக்கு ஐம்பது அறுபது வயதை அடைந்தவர்கள், ஒரு பத்து இருபது ஆண்டில் மறைந்து விடலாம். நமக்கு அடுத்த தலைமுறையான முப்பது நாற்பது வயதில் இருப்பவர்களுக்குக் கஷ்டம். அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் இன்னும் ஐம்பது அறுபது ஆண்டுகள் இருப்பார்கள். அவர்கள் காலத்தில், நமது பேரன், பேத்தி காலத்திலே, அவர்களெல்லாம் கஷ்டப்படுவார்கள். அந்தக் கஷ்டம் அதிகமாகக்கூடாது என்று சொன்னால் இன்றைக்குத் திருமண வாழ்க்கை



உதகைக் கருத்தரங்கிற்கு வருகைதரும் பேராசிரியர் அவர்களை, நீலகிரி மாவட்டக் குடும்பநலத்துறை அலுவலர் டாக்டர் அய்யாசாமியும், மற்ற அலுவலர்களும் வரவேற்கிறார்கள்.

நடத்துகிறவர்கள் — கணவன், மனைவியாக இருக்கிற எல்லோரும் குடும்பத்தை அளவாக வைத்துக்கொள்ள வேண்டும்.

அதற்கு இங்கே உள்ள இந்த மகப்பேறு கிளை மருத்துவமனையில் உள்ள மருத்துவச் செவிலியர்களை ஆலோசனை கேட்டால், அவ்வப்போது குழந்தை உண்டாகாமல் தடுத்துக் கொள்ள ஆலோசனை கூறுவார்கள்.

இதெல்லாம்—நமது நாட்டுக்கு விஞ்ஞான முறையிலே புதியதே தவிர, நமது நாட்டிலே பழங்காலத்திலே தாய்மார்கள் கரு உண்டாகாமலிருக்கப் பலமுறைகளைக் கையாண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே கையாண்ட முறைகளெல்லாம் சில புத்தகங்களிலே இருக்கின்றன.

அதிலேஒன்று, கணவன் மனைவி இன்னின்ன நாட்களிலே சேர்ந்து இருக்கக் கூடாது என்பது. மனைவியைத் தாய் வீட்டுக்கு ஆண்டுக்கு நான்கு மாதம் அனுப்புவார்கள். இவையெல்லாம் சேர்ந்து குழந்தை பிறக்கிற வேகத்தைக் குறைக்கும். இன்றைக்கு அப்படியெல்லாம் நிலைமை இல்லை. இன்றைக்கு யார் யாரோ சாயந்திரம் ஒரு சினிமாவுக்குப் போனால் மறுநாள் காலை செய்தி வேறு ஆகும்! ஆகவே சினிமாவுக்குப் போகிற பழக்கம் வந்துவிட்ட இந்த நாட்டிலே, பழைய முறைகள் எல்லாம் இல்லை. அதனாலே தான் புதிய முறைகள்-விஞ்ஞான முறைகள்—உலகம் முழுவதிலும் பயன் படுத்துகிற முறைகள்—அந்த முறைகளிலே ஒரு குழந்தை பிறந்து, அடுத்த குழந்தை பிறப்பதற்கு இடைவெளி வைத்துக் கொள்ளக்கூடிய அளவுக்குத் தகுந்த கட்டுப்பாடுகளைக் கையாளலாம். ஆனால் இரண்டு, மூன்று குழந்தை பிறந்து விட்டால், இனி நமக்குக் குழந்தை பிறக்கத் தேவையில்லை என்று தீர்மானித்தால், அதிலும் இன்றைக்கு ஆயிரக்கணக்கான தாய்மார்கள் அதற்கான அறுவைச் சிகிச்சை முகாம்களில் தங்கி, அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறார்கள்.

அறுவைச் சிகிச்சையிலே நல்ல தேர்ச்சி பெற்ற பெரிய டாக்டர்கள் சென்னையிலிருந்து வந்து முகாம் நடத்துகிறார்கள். தாய்மார்கள் இதைப் பயன் படுத்திக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டில் இரண்டரை லட்சம் தந்தைமார்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள். சென்ற ஆண்டில் அதைவிட அதிகமாக-- இரண்டே முக்கால் இலட்சம் பேருக்குமேல் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள்.

இந்த வட ஆர்க்காடு மாவட்டத்தில் மட்டும் பதினேழு முதல் இருபதாயிரம் பேர் வரை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 40 ஆயிரம் பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள்.

ஆக, அப்படிப்பட்ட திட்டத்திலே ஆண்கள் ஒரு குடும்பத்தைப் பாதுகாக்க அக்கறையாக குடும்பநலத் திட்டத்தின்கீழ் சிகிச்சை செய்துகொள்ளலாம்.

எனவே, குழந்தைகளைக் காப்பாற்ற, தாய்மார்களைக்காப்பாற்ற இம்மகப்பேறு நிலயத்தைத் திறந்து வைக்கின்ற இந்த நேரத்தில் தந்தையர்கள், தங்கள் தங்கள் பிள்ளைகளைக் காப்பாற்ற, மேலும் புதிது புதிதாகப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

✿—✿



நீலகிரி மாவட்ட மக்கள் தொகையியல் கல்விக் கருத்தரங்கைத் துவக்கி வைத்து, பேராசிரியர் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.



உதகைக் கருத்தரங்கில் இயக்குநர் டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் உரை நிகழ்த்துகிறார்.

# மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஒழுக்கம், நாணயம் கெடுகின்றன!

## மாதனூர் விழாவில்

## மேதகு ஆளுநர் கே. கே. ஷா

வட ஆர்க்காடு மாவட்டம், மாதனூரில் ரூ. 92,880 செலவில் கட்டி முடிக்கப்பட்ட குடும்பநல நிலயம் மற்றும் அலுவலர் குடியிருப்பு இல்லங்களை, தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழா, கடந்த 27-7-73 அன்று காலை, மாதனூரில் சிறப்பாக நடைபெற்றது.

மாதனூரே விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகளெல்லாம் கொடி, தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. வரவேற்பு வளைவுகள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருந்தன.

வாணவேடிக்கைகள், நாதசுர, பேண்டு வாத்திய முழக்கங்களுடன் ஆளுநரை வரவேற்று, ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

விழாப் பந்தலின் இருமருங்கிலும் மாணவ, மாணவிகள் அணி வகுத்து நின்று, மலர்களைத் தூவி வரவேற்றனர்.

விழாப்பந்தல் முகப்பில், மாநிலக் குடும்பநலத்துறைத் துணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் டி. எம். லிங்கையா, ஆளுநருக்கு மாலை அணிவித்து வரவேற்றார். மற்றும், மாவட்டக் குடும்பநல அதிகாரி டாக்டர் சி. கே. தீர்த்தகிரி, ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊராட்சி மன்றத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் திரு. பன்னீர் செல்வம், மேலவை உறுப்பினர் திரு. இல. பலராமன் ஆகியோர் எதிர்கொண்டு வரவேற்றனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி. ஆறுமுகம், ஐ.ஏ.எஸ். தலைமையில் விழா தொடங்கியது. மாநிலக் குடும்பநலத்துறைத் துணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் லிங்கையா வரவேற்புரையாற்றினார். அவர் தமது உரையில், தமிழகக் குடும்பநலத் துறையின் சாதனைகளை விளக்கி, இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டும் வகையில், தமிழ்நாடு இருந்து வருவதைப் பெருமையுடன் எடுத்துக் கூறினார்.



மாதனூரில் மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், ஆரம்பச் சுகாதார நிலயத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றுகிறார்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மேலவை உறுப்பினர் திரு. இல. பலராமன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

ஊராட்சி மன்றத்தின் சார்பில் தலைவர் திரு. கிருஷ்ணசாமி முதலியாரும், ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. ஆர். எஸ். ஜானகிராம ராஜாவும் ஆளுநருக்கு வரவேற்பு மடல் படித்தளித்தனர்.

இறுதியாக, மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், திறப்பு விழா உரையாற்றினார். அவர் தமது உரையில், மக்கள்தொகைப் பெருக்கத்தால் நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகின்றன என்பதையும், மக்களின் ஒழுக்கத்தையும், நாணயத்தையும் கூட, மக்கள் தொகை வளர்ச்சி கெடுக்கிறது என்பதையும் தக்க மேற்கோள்களுடன் எடுத்துரைத்து விளக்கினார்.

கட்டிடம் கட்டுவதற்கான அடிநிலத்தை நன்கொடையாக வழங்கிய திரு. ஏ. கே. கோவிந்தசாமிக்கு ஆளுநர் மாலையணிவித்துப் பாராட்டினார்.

வ. ஆ. மாவட்டக் குடும்பநலத் துறை அதிகாரி டாக்டர் தீர்த்தகிரி நன்றிகூற, விழா இனிது முடிவுற்றது.

—மா. செ.

# முகவை மாவட்டத்தில் அன்னையர்க்கான அறுவைச் சிகிச்சை முகாம்

முகவை மாவட்டம் அதாவது இராமநாதபுரம் மாவட்டம், தனக்கெனத் தனியொரு வீர வரலாறு கொண்ட மாவட்ட மாகும்.

அந்த மாவட்டத்து மக்களின் நல்வாழ்வுக்காகத் தமிழ்நாடு அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்ட மாவட்டம் என அறிவிக்கப்பட்டுப் பிரத்தியேகக் கவனத்திற்கு உள்ளாகி இருப்பது முகவை மாவட்டம். ஆங்காங்கே தொழிற் சாலைகள் ஏற்பட்டு வருகின்றன. விவசாய முன்னேற்றத்திற்கான அனைத்தும் செய்யப்பட்டு வருகிறது. எந்தெந்த வகையில் இம் மாவட்ட முன்னேற்றத்திற்கு உதவ முடியுமோ அப்படியெல்லாம் தமிழக அரசு உதவி வருகிறது. அவற்றாலே விளையும் பயனை அனைவரும் அனுபவிக்க வேண்டுமானால் குடும்ப நலத் திட்டம் வெற்றி பெற வேண்டுமெனக்கருதி, இம்மாவட்ட மக்கள் சிறு குடும்ப நெறியை ஏற்று வருகிறார்கள்.

இம் மாவட்டம் சென்ற ஆண்டுகளில் நடத்திய முனைப்பு இயக்கங்களில் கணிசமானவர்களுக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து முடித்தது. 1971-72-ஆம் ஆண்டு, நடத்திய முனைப்பு இயக்கத்தின்போது 10,285 பேர்களுக்கும், அதே ஆண்டு சாதாரண காலத்தில் 2173 பேர்களுக்குமாக, மொத்தத்தில் 12,458 பேர்களுக்கும், 1972 73ல் முனைப்பு இயக்கத்தின்போது 11,210 பேர்களுக்கும், சாதாரண காலத்தில் 359 பேர்களுக்குமாக மொத்தம் 11,569 பேர்களுக்கும் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து முடித்தது.

நடப்பு ஆண்டில் (1973-74) இம் மாவட்டம் தாய்மார்களுக்கான அறுவைச் சிகிச்சை முகாம் நடத்துகிறது. ஒவ்வொரு முகாமிலும் 300க்குக் குறையாத தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்தால், ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும் ரூ. 90 வீதம் இந்திய அரசு மான்யம் வழங்கிறது. இது தவிர, ஊக்க மூட்டி தாய்மார்களை அறுவைச் சிகிச்சைக்குள்ளாக்குவோருக்கு, அறுவைச் சிகிச்சை ஒவ்வொன்றிற்கும் ரூ. 10 வீதம் தமிழ்நாடு அரசு தனது நிதியிலிருந்து வழங்குகிறது.

முதலில் விருதுநகர் அரசு மருத்துவ மனையில் 2-7-73 முதல் தாய்மார்களுக்கான அறுவைச் சிகிச்சை முகாம் தொடங்கி நடைபெற்றது. இம் முகாமை மாவட்டக் குடும்பநல அலுவலர் டாக்டர் முகமது அலிப் பாட்சா தலைமையில், மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் ஜி. கல்யாணம் துவக்கி வைத்தார். மேற்கு இராமநாதபுரத்தில் உள்ள பதினோர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த தாய்மார்கள் விருதுநகர் முகாமில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வசதி செய்யப்பட்டிருந்தது.

அதேபோல் சிவகங்கை அரசு மருத்துவமனையில் 17-7-73 முதல் பெண் அறுவைச் சிகிச்சை முகாம் நடைபெற்றது. சிவகங்கையைச் சுற்றிலுமுள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த தாய்மார்கள், இம் முகாமில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

இம் முகாம்களில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்கள் 6 நாட்கள் வரை, இலவச உணவு வசதியோடு தங்கவைக்கப்பட்டு, தகுந்த சிகிச்சைக்குப் பின் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். தாய்மார்களோடு உதவிக்கு வருபவர்கள், கைக் குழந்தைகள் ஆகியோருக்கும் இங்கு உணவு வழங்கப்பட்டது. உதவிக்கு வருபவர்கள் தங்குவதற்கென மருத்துவ மனைக்குள்ளேயே கொட்டகையொன்று போடப்பட்டு வசதி செய்து தரப்பட்டிருந்தது. இந்த இரு முகாம்களிலும் மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் ஜி. கல்யாணம் தலைமையில் இயங்கும் இரு மருத்துவர் குழுக்கள் அறுவைச் சிகிச்சை நடத்தின.

தாய்மார்களை உற்சாகப்படுத்த வேண்டி, அறுவைச் சிகிச்சைக்குள்ளான தாய்மார்களுக்கெனப் பரிசுகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குலுக்கல் மூலம் ரூ. 1,500 வரையிலான பல ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. சிறப்பாக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொரு தாய்க்கும், வீடு திரும்பும்போது, ஈட்டுத்தொகை முப்பது ரூபாயோடுகூட ரூ. 12·60 விலையுள்ள இரும்புக் கைப்பிடிபோட்ட குடை ஒன்று பரிசாக வழங்கப்பட்டது.

பொதுவாக ஊராட்சி ஒன்றியத்தினரும், குடும்பநலத் துறையினரும். இம் முகாம்களை வெற்றியுறச் செய்ய முனைந்து பணியாற்றினர். விருதுநகர் அரசு மருத்துவ மனையில் அமைக்கப்பட்டிருந்த முகாமில் 7-8-73 வரை 520 தாய்மார்களும், சிவகங்கை அரசு மருத்துவ மனையில் அமைக்கப்பட்டிருந்த முகாமில் 7-8-73 வரை 229 தாய்மார்களும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர். இராமநாதபுரத்திலுள்ள அரசினர் தலைமை மருத்துவமனையில் தாய்மார்களுக்கான அறுவைச் சிகிச்சை முகாம் நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

—எஸ். முத்துராமலிங்கம்.

# நெஞ்சில் பூத்த மலர்

கே.ஜி.இராதாமணாளன்

ஓடிய கதை :

['கதிரவன்' தினசரியின் துணையாசிரியரான துரைசாமி—தொலைபேசி மூலம் கிடைத்த ஒரு செய்தியினால், மனவேதனையடைகிறார்.

35 வயதான பரந்தாமன் என்பவன், குடும்பத் தொல்லைகள் காரணமாகத் தற்கொலை செய்து கொள்கிறான். அவனுக்கு ஆறு குழந்தைகள்; பெரிய குடும்பம்—இதுதான் அந்தச் செய்தி.

துரைசாமியைத் தவிர, பத்திரிகை அலுவலகத்தைச் சேர்ந்தவர்களோ — தேநீர் விடுதியில் இருந்தவர்களோ— அச்செய்தியைப் பொருட்படுத்தவில்லை!

இறந்தவனுக்காக யாரும் ஓர் அனுதாபவார்த்தைகூடச் சொல்லவில்லையே என்று, அவர் வேதனையடைகிறார்.

உயிரின் இசையான மூச்சை, தானே நிறுத்திக் கொண்ட அந்த பரிதாபத்துக்குரிய மனிதனின் வாழ்க்கை என்ன—அவனது அடிவயிற்றிலே பற்றி எரிந்து, இதயத்தையே பொசுக்கிய அந்த நெருப்பு என்ன—இவற்றை அறியவேண்டும் என்ற துடிப்போடு, துரைசாமி காவல் நிலையத்தை நோக்கி நடக்கிறார்!

வாலிபன் தற்கொலைசெய்து கொண்டதால், அன்றிரவு முழுவதும் தனது தூக்கம் கெட்டுப்போனது பற்றிச் சலிப்போடு பேசுகிறார், சப் இன்ஸ்பெக்டர்.

பிணத்தைக் கண்டு மனைவியும், தாயும், தந்தையும் கதறியழுதது பற்றி அவர் கூறியது துரைசாமியின் இதயத்தைத் தொடுகிறது.

பரிதாபத்துக்குரியவனின் குடும்பத்தாரைப் பார்த்துப் பேச, சப் இன்ஸ்பெக்டரிடம் முகவரி வாங்கிக்கொண்டு, துரைசாமி காவல் நிலையத்தை விட்டு வெளியே வருகிறார்.

மறுநாள் இரவு சைதாப் பேட்டையிலுள்ள பரந்தாமனின் இல்லத்துக்கு அவர் வருகிறார்.

பரந்தாமனின் தந்தையான முதியவர் தற்கொலை செய்து கொண்ட மகனை பி.ஏ. படிக்க வைக்கத் தாம் பட்ட சிரமங்களை வேதனையோடு கூறுகிறார்.

"அவன் நெற்றியிலே வித்தை எழுதிய பிரம்மா—நிரந்தரமாக ஒரு வேலையை எழுதினானா? அதுதான் இல்லை என்றால், குழந்தைகளையாவது ஒன்றிரண்டு என்று எழுதியிருக்கக் கூடாதா? ஆறு குழந்தைகள்! அவன் தலையெழுத்து!" என்று இறந்தவனின் தாய் அழுகிறாள்.

அந்த வீட்டைவிட்டு வெளியே வந்த துரைசாமி, வழியில் தமது நண்பரான கல்லூரிப் பேராசிரியர் மாணிக்கத்தைச் சந்திக்கிறார்.

பரந்தாமன் தம் மாணவன் தான் என்று கூறிய பேராசிரியர், மக்கள் தொகைப் பெருக்கத்தால், இன்றைய கல்விமுறை செயலற்றதாகி விட்டதென்று ஆவேசத்தோடு பேசுகிறார்.

"சரி, மாணிக்கம்! பரந்தாமனின் தற்கொலைக்கு என்ன காரணம் என்று உனக்குத் தெரியுமா?" என்று துரைசாமி கேட்கிறார்.

"தெரியும். என்ன காரணம் என்பது மட்டுமல்ல, யார் காரணம் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்!" என்று பேராசிரியர் பெருமூச்சு விடுகிறார். பிறகு......]

"என்ன காரணம்? யார் காரணம்?" என்று துடிதுடிப்போடு கேட்ட துரைசாமியைப் பார்த்து, பேராசிரியர் மாணிக்கம் சிரித்தார்.

பேராசிரியர் சொன்ன காரணத்தைக் கேட்டதும்—அவரது மனதில் சிலுசிலுப்பு ஏற்பட்டது.

இவ்வளவு காலமாகத் தாம் கொண்டிருந்த கருத்து, எவ்வளவு தவறானது—எத்தகைய ஆபத்தானது—என்பதை உணரத் தொடங்கினார். பல்வேறு உணர்ச்சிகள் உள்ளத்தில் குதித்தாட்டம் போட்டன.

பேராசிரியரின் பேச்சைக் கேட்டுப் பதில் ஒன்றும் சொல்லத் தோன்றாமல், அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு துரைசாமி சென்றார்.

ஏனோ அவர் தோள்களின்மீது உலகத்தின் சுமையெல்லாம் அழுத்தியதுபோல. கால்கள் நடக்கமுடியாமல் தோய்ந்தன.

எப்படியோ தம்மைச் சமாளித்துக்கொண்டு, தமது அறையில் வந்து படுத்தார்.

"ஆண்டவனின் வரப்பிரசாதம் குழந்தை! அதை வேண்டா மென்று சொல்வதோ—தடுப்பதோ—மாபெரும் பாபம்!" என்ற அவரது நெடுங்காலக் கருத்து, அவரைப் பார்த்துக் கெக்கலி கொட்டிச் சிரித்தது.

அவரது இருண்ட இருதயத்திற்குள் பயங்கரக் கூச்சல் எழுந்தது.

மெல்லக் கண்களை மூடினார். தூக்கம் அவரை மெதுவாகத் தட்டிக் கொடுத்தது.

பைத்தியக்காரச் சிரிப்பு! முடிவில்லாப் பெருமூச்சு! சாவுக்கூடம்!

இருண்ட மண்டபத்தில், குருட்டுப்பெண் ஒருத்தியின் கர்ப்பத்திலிருந்து அடுத்தடுத்துக் குழந்தைகள் பிறக்கின்றன! நொடிக்கு ஒரு குழந்தை! முடிவில்லாத சந்தானப் பிரவாகம் பாய்கிறது!

பிரசவ வேதனையின் பெருமூச்சினால், காற்று கனமாக இருக்கிறது.

அந்த இருண்ட மண்டபத்தின் உள்ளே விகாரமான கூச்சல், முனகல்! முடிவில்லாமல் அந்த ஒலி கேட்டுக்கொண்டே இருக்கிறது!

"குழந்தைகள் பிறக்கின்றன! பிறந்துகொண்டே இருக்கின்றன! காலன் சிரிக்கிறான்—அவற்றின் கணக்கைக் கேட்டு!" என்ற கருத்துக்கொண்ட பாட்டை, எங்கோ, எவனோ, ஏளனமான குரலில் பாடிக் கொண்டிருக்கிறான்.

"ஊம்! நீ பெற்றது போதாது! இன்னும் பெறு!" என்று யாரோ, குருட்டுப் பெண்ணை விரட்டியது போன்ற குரலில் சொல்கிறார்கள்.

சிசு வெள்ளம் அதிகரிப்பதைக் கண்டு, "அய்யோ! நான் இந்தப் பிரசவ வேதனையைத் தாங்கமாட்டேன்!" என்று குருட்டுப் பெண் முனகியபடியே அழுகிறாள்.

"அழுதாலும், நீ பெற்றே ஆக வேண்டும்!" என்று அதிகாரக் குரலொன்று கடுமையாகக் கேட்கிறது.

"ஏன்? ஏன்? நீ கொல்லவேண்டுமென்பதற்காக, நான் பெற்றாக வேண்டுமா?" என்று அவள் வெகுண்டு கேட்கிறாள்.

"ஆம்! நான் கொல்வதும், நீ பெறுவதும்—இரண்டும் நிற்கவே கூடாது!"

"இல்லை! என்றால் அது முடியாது!"

"முடியாதா? முடியாதா?"

அதிகாரக் குரலில் பேசிய உருவம், எதிர்த்துப் பேசிய பெண்ணைச் சாட்டையால் அடிக்கிறது.

அவளுடைய கண்களில் முட்டி நின்ற கண்ணீர், சிந்திச் சிதறுகிறது. சிதறிய கண்ணீர்பட்டு, வானம் சூடேறிச் சிவப்பாகிறது. ஆனாலும் சாட்டை அடி நிற்கவில்லை.

"அய்யோ! நான் பெறமாட்டேன்! ஏற்கனவே பெற்றது அதிகம்!"

"தடை சொல்ல நீ யார்? அது ஆண்டவன் தருவது!"

"என் உடலை வருத்தித்தானா—ஆண்டவன் தரவேண்டும்? வானத்திலிருந்து மழை பெய்வதைப் போல, குழந்தைகளைக் கொட்டச் சொல்! பிடித்துக் கொள்கிறேன்!"

"எதிர்த்தா பேசுகிறாய்? ஏளனமா செய்கிறாய்?"

சாட்டையடி தொடருகிறது.

"என் உடலுக்குப் பலமில்லை! முடியாது! இன்னும் அதிகமாகப் படைக்க முடியாது! படைக்கும் என்னையே கொன்று விடு!" என்று அடியைப் பொறுக்கமாட்டாமல், பெண் கதறுகிறாள்.

"அயராதே மனமே—அல்லலுறாதே! காப்பவனே சொல்கிறான்—கடவுளே கட்டளையிடுகிறான்—தயங்காதே! பெறு! பெறு! பெற்றுக்கொண்டே இரு!" என்று பெண்ணின் கதறலைச் சுருதியாகக் கொண்டு, பிரேதக்குரல் ஒன்று பாவமற்ற ராகத்தில் பாடுகிறது.

"உம்! சீக்கிரம் நடக்கட்டும்—வேகமாக நடக்கட்டும்–படைப்புத் தொழில்! சாவுக்கோவிலில் ஆட்கள் வேலையற்று நின்று கொண்டிருக்கிறார்கள்! தூக்கு மரங்கள் மொட்டையாக நிற்கின்றன! நச்சுக்கோப்பைகள் நிறைந்து வழிகின்றன! சிறைச்சாலைகளின் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன! நெருப்புக்கு ஆகாரமில்லை! வறுமை சிறிக்கொண்டிருக்கிறது! நோய்கள் ஆத்திரத்தோடு அலைகின்றன! உம்! நிறுத்தாதே! பெறு! பிள்ளைகளைப் பெறு!" என்று பெண்ணைச் சாட்டையால் அடித்துச் சொல்லுகிறது, அதிகாரக்குரல்.

அந்த அடிதாங்காமல், பெண்ணின் கர்ப்பத்திலிருந்து மீண்டும் சந்தானப் பிரவாகம் பாயத் தொடங்குகிறது.

சாட்டையால் பெண்ணை அடித்த உருவத்தின் குரல், அதைக் கண்டு பெருங் குரலெடுத்துச் சிரித்தது இடியோசைபோல அந்த அட்டகாசமே, இருண்ட மண்டபத்தைச் சுற்றிலும் நிறைகிறது.

அந்த அட்டகாசத்தைக் கேட்டு, நிலம் நடுங்குகிறது. வானம் அதிர்கிறது, திக்குத் திசைகளெல்லாம் வெடவெடக்கின்றன.

பைத்தியக்காரச் சிரிப்பு! முடிவில்லாப் பெருமூச்சு! சாவுக்கூடம்!

படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த துரைசாமியின் உடல் வேர்த்ததால், படுக்கை ஈரமாகியிருந்தது. முனகி, பெருமூச்சு விட்டு அவர் கண்திறந்து பார்த்தார்.

கண்டது கனவுதான் என்பதை உணர்ந்ததும்—அவரது உள்ளம் சிலிர்த்தது.

பலகணி வழியாக உள்ளே நுழைந்த வெயில், அவரைத்தட்டியெழுப்பி, அன்றைய வேலைக்கு விரட்டியது.

உடலைச் சிரமப்பட்டுத் தள்ளிக் கொண்டு வந்து சேர்ந்தார், அலுவலகத்துக்கு.

"என்ன துரைசாமி, இன்றைக்கா இவ்வளவு தாமதமாக வருவது! நேரம் என்ன என்பதை, கடிகாரத்தில் பாரும்!" என்று ஆசிரியர் சிடுசிடுத்தார்.

"மன்னித்துக் கொள்ளுங்கள்!"

"மன்னிப்பது இருக்கட்டும்! சட்டமன்றம் நடந்துகொண்டிருப்பது உமக்கு ஞாபகமில்லையா? இரு நிருபர்களை அனுப்பியிருக்கிறேன்! நீங்களும் அங்கே போய் விட்டு வாருங்கள்! பத்திரிகை அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக்குத் தனிக்குணம் மட்டுமல்ல—தனிவேகமும் வேண்டும்! அந்தக் குணமில்லாதவர்கள் பத்திரிகைத் தொழிலுக்கு வரக் கூடாது—எங்கேயாவது மண்டியிலே ஆரஅமர கணக்கெழுதிக் கொண்டிருக்கலாம்! அப்படித் தான் நேற்று சொல்லாமல் கொள்ளாமல், அலுவலகத்துக்கு வராமல் நின்று விட்டிருக்கிறீர்!"

"பரந்தாமன் என்பவனின் தற்கொலைபற்றிய செய்தியைக் கேட்டது முதல், மனம் ஒரு நிலையில் இல்லை! சொல்ல முடியாத வேதனை! அதனால்தான்......"

"என்ன பிதற்றல்! அந்தமாதிரி ஒரு நாளைக்கு ஆயிரம் செய்திகள் வரும்! இப்போது எதற்காக அதைப்பற்றியெல்லாம் பேசி நேரத்தை வீணாக்க வேண்டும்! சரி, சீக்கிரம் புறப்படுங்கள்! அப்படியே 'லாபி' வட்டாரங்களில் மந்திரிசபை விஸ்தரிப்புப்பற்றி ஏதாவது தெரிகிறதா என்று பாருங்கள்!"

ஆசிரியர் தமக்கேஉரிய உரத்தக் குரலில் பேசி நிறுத்தினார்.

வந்த மாதிரியே துரைசாமி உடலை இழுத்துக்கொண்டு புறப்பட்டார்! ஆனால் அவர் உள்ளம்...

(வளரும்)

உதகை கருத்தரங்கில் உரையாற்றியவர்கள்: (1) துணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் டி. எம். லிங்கையா, (2) துணை இயக்குநர் (விளம்பரம்) திரு. பூ. கணேசன், (3) பேராசிரியர் என். எம். விசுவநாதன், (4) நீலகிரி மாவட்ட குடும்ப நல விளம்பர அலுவலர் திரு. ஆர். கே. சம்பந்தம், (5) மாநில நல் வாழ்வுக் கல்வி அலுவலர் திரு. ஜி. இராசமாணிக்கம், (6) மக்கள் தொகைப் புள்ளி விவர அலுவலர் திரு. எம். கே. ராம்.



# வெற்றியின் இரகசியம்

நீலகிரி மாவட்டம் கடந்த ஆண்டுகளில் தொடர்ந்து, தனது இலக்கையும் விஞ்சி, குடும்பநல அறுவைச் சிகிச்சைகளைச் செய்து, சாதனை புரிந்து வந்திருக்கிறது. இந்த வெற்றியின் இரகசியம் என்ன?

நீலகிரி மாவட்டக் குடும்பநல விளம்பர அலுவலர் திரு. ஆர். கே. சம்பந்தம், 'குடும்பநலச் செய்திக் கதிர்' நிருபரிடம் அந்த இரகசியத்தை வெளிப்படுத்தியுள்ளார். அவரை நிருபர் கண்ட பேட்டி விவரம் வருமாறு:—


**கேள்வி** : எத்தனை ஆண்டுகளாக நீங்கள் இந்தப் பணியில் இருக்கின்றீர்கள்?

**பதில்** : ஏறத்தாழ ஐந்தாண்டுக் காலமாக இருந்து வருகிறேன்.

கே : இந்தப் பணியில் தங்களுக்கு உள்ள ஆர்வம் காரணமாகச் சேர்ந்தீர்களா? அல்லது அரசு அலுவல் சார்ந்த முறையில் இப்பணியை மேற்கொண்டீர்களா?

ப : இதற்குப் பதில் சொல்ல வேண்டுமானால், உத்தியோகத்தின் காரணமாக இப்பணியை மேற்கொண்டதாகத்தான் சொல்ல முடியும். உத்தியோகத்தில் சேர்ந்தபின் மிக்க ஆர்வத்தோடு இதில் ஈடுபாட்டுப் பணியாற்றி வருகிறேன்.

கே : நீலகிரி மாவட்டத்தில் குடும்பநலப் பணிகள் நடைமுறை பற்றி நீங்கள் கூற விரும்புவது என்ன?


திரு. ஆர். கே. சம்பந்தம்—திரு. மா. செங்குட்டுவன்.

ப : இந்த நீலகிரி மாவட்டத்தில் நான் 1968-ஆம் ஆண்டு இப்பதவியை ஏற்றேன். அதற்குமுன்பாக, இக்குடும்பநலத் திட்டம் இந்த மாவட்டத்தில் அவ்வளவாகப் பரவவில்லை. நான் பணியேற்று, ஒரு மூன்றாண்டுக் காலம் இரவு பகலாக விளம்பரப் பணியை மேற்கொண்டேன். அதன் காரணமாகக் குடும்பநலத் திட்டத்தின் அவசியத்தைப் பற்றி இங்குள்ள மக்கள் நன்றாகப் புரிந்துகொண்டார்கள். அதற்குப் பிறகு, களப்பணியாளர்கள்—அதாவது சுகாதார ஆய்வாளர்கள், வளர்ச்சி வட்டார விரிவாக்க அலுவலர்கள், நலவழிப் பார்வையாளர்கள், துணைச் செவிலியர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டதற்குப் பின்னால், நாங்கள் கையாண்ட முறைகள் நல்ல பலனை அளித்தன.

அதன் பலனாகக் குடும்பநலத் திட்டங்கள் இந்த மாவட்டத்தில் நல்ல முறையிலே கடைபிடிக்கப் பட்டு வருகின்றன.

கே: தமிழ்நாட்டில் இந்த நீலகிரி மாவட்டம், நல்ல முறையில் குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்தி, ஒவ்வொரு ஆண்டும் தனது இலக்கையும் விஞ்சிச் சாதனைகளைப் புரிந்து வருவதாக அறிகிறோம். உங்களால் இதை எப்படிச் சாதிக்க முடிந்தது?

ப : நான் ஏற்கனவே சொல்லியபடி குடும்பநலத் திட்ட விளம்பரப் பணியை மிக வேகமாக முடுக்கி விட்டோம். முதல் மூன்று ஆண்டுகளில் விளம்பரப் பணிகள் தாம் மிக அதிகமாக இங்கே நடைபெற்றன. அப்படி அந்த விளம்பரப் பணிகளிலே குடும்பநலத் தொடர்பான படக் காட்சிகளை அடிக்கடி காட்டுவதன் மூலமும், நாடகங்களை நடத்துவதன் மூலமும் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடிந்தது. இந்த மாவட்டத்து மக்கள் படக்காட்சியோ, அல்லது நாடகமோ தங்களுடைய கிராமத்திலே நடத்தினால், அந்த வாரத்திலோ, அந்த மாதத்திலோ ஒரு பத்து அல்லது பதினைந்து நபர்களை அறுவைச் சிகிச்சைக்கு அனுப்புவதாக உறுதி மொழியெல்லாம் எங்களுக்குத் தருகிறார்கள். அந்த அளவுக்கு விளம்பரப் பணியின் மூலம்தான் இந்த இலக்கை எங்களால் அடைய முடிகிறது.

அடுத்து, இந்த மாவட்டத்து மக்களிடம் நல்லதொரு புதியகருத்தைச்சொன்னால், அந்தக்கருத்துத் தங்களுக்கு உதவும் என்று தெரிந்தால் அதனை உடனே—மற்ற மாவட்டத்து மக்களை விட விரைந்து ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறார்கள் என்பதை அவர்களிடையே பணியாற்றுவதன் மூலம் கண்டேன்.

கே : அதாவது மக்களுடைய மனப்பான்மையை அறிந்து கொண்டு அதன் வழி செயல் படுகிறீர்கள்?

ப : ஆம். இந்த மாவட்டத்தில் பொதுவாக, 'படுகர்' என்ற சமுதாயத்தினர்தாம் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களின் ஒவ்வொரு குடும்பத்திலேயும், ஐந்தாறு குழந்தைகள் ஏற்கனவே இருந்து வந்தன. அதனாலே அவர்களுடைய குடும்பங்கள் முன்னேற முடியாமல் இருந்ததை நாங்கள் அவர்களுக்கு எடுத்து உணர்த்தினோம். அதற்குப் பின்பு. அவர்கள் நல்ல முறையில் அதனைப் புரிந்துகொண்டு, இப்பொழுது அறுவைச் சிகிச்சைக்கு நிறைய நபர்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கே : மற்ற மாவட்டங்களோடு ஒப்பிடும்போது, இந்த நீலகிரி மாவட்டம் பல வகையிலும் மாறுபட்ட சூழ்நிலையில் உள்ளது. அதாவது குறிப்பாக இது ஒரு மலைப்பகுதி. தட்பவெப்பநிலையும், மக்கள் பழக்க வழக்கங்களும் மாறுபட்டிருக்கின்றன. இருந்தும், நீங்கள் எப்படிக் குடும்பநலத் திட்டத்தை இந்த அளவுக்கு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வர முடிகிறது?

ப : இந்த மாவட்டத்து மக்களுடைய பழக்க வழக்கங்களுக்கும், கலாச்சாரத்துக்கும் நாங்கள் ஒத்துப் போகின்றோம். இந்த மாவட்டத்து மக்களிடையே நாங்கள் கலந்து பழகும்போது, அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், பண்பியல்புகளையும் அறிந்து கொள்வதில் ஊக்கம், உற்சாகம், அக்கறை காட்டி, அவற்றுக்கேற்ப அவர்களோடு பழகி வருகிறோம். இதனால் எங்களையும் அவர்கள் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதி. எங்கள் கருத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.

கே : நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னர்—நீங்கள் இங்கு விளம்பரப் பணியை மேற்கொள்வதற்கு முன்னர், இந்த மாவட்டத்திலே குடும்பநலத் திட்டம் எந்த அளவுக்கு நிறைவேற்றப் பட்டு வந்தது?

ப : பிரச்சாரப் பணியைப் பொறுத்த வரை, நான் இங்கு வந்த பிறகுதான் துவக்கப் பட்டது. அதற்கு முன்னாலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே, ஒரு தாசில்தார் இதற்கென்று நியமிக்கப்பட்டு, அவர் பொறுப்பில் பணிகள் நடைபெற்று வந்தன. தீவிர விளம்பரப் பணி மூலம் குடும்பநலத் திட்டம் செயல் படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கிற விழிப்புணர்ச்சி அப்போது இருந்திருக்க முடியாது.

கே : பிரச்சாரப் பணிதான் வெற்றிக்குக் காரணம் என்கிறீர்களா?

ப : ஆம். நிச்சயமாகப் பிரச்சாரப் பணிதான். மேலும், நாங்கள் நடத்திய பயிற்சி முகாம் (Orientation Training Camp), மற்றும் குடும்பநல இருவாரவிழா நிகழ்ச்சிகளிலெல்லாம், அதிகாரிகள், ஆசிரியர்கள், ஊர்த் தலைவர்கள் ஆகியோரை அழைத்து, கலந்து கொள்ளச் செய்து, உற்சாகத்தை உண்டாக்கினோம்.

கே : மாவட்ட அளவிலே ஏதேனும் குழு அமைத்துச் செயல் பட்டீர்களா?

ப : மாவட்ட அளவிலே, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைத்தோம். அதிலே, ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இடம் பெற்றிருக்கிறார்கள். பொது மக்களிடையே செல்வாக்கு மிகுந்த பெருமக்களையும் துணையாகக் கொண்டு, இப்பணியிலே நாங்கள் ஈடுபட்டு வருகிறோம்.

கே: அரசுச்சலுகைகள் முதலியவற்றை முழு அளவில் இந்த மாவட்டத்துக்குப் பெற்றுப்பயன் படுத்தி வருகிறீர்கள் அல்லவா?

ப : அரசுச் சலுகைகளை, மற்ற மாவட்டங்களைப்போல, அதாவது அறுவைச் சிகிச்சைக்கு நூறு ரூபாய் கொடுப்பது போன்ற சலுகைகளை—நாங்கள் பெறுவதில்லை. எப்போதும் தருகிற முப்பது ரூபாயை வைத்தே ஒரே ஒரு முறை தீவிர இயக்கத்தை நடத்தினோம். அதிலே ஆயிரம் என்று இலக்கு நிர்ணயிக்கப் பட்டது. ஆனால், முப்பது ரூபாய் மட்டுமே கொடுத்து அந்த இலக்கையும் மீறிச் சாதனை புரிந்தோம்.

கே : எல்லாச் செலவும் அந்த முப்பது ரூபாயிலேயே முடிந்து விடுகிறதா?

ப : ஆம். மற்ற மாவட்டங்களில் கொடுக்கப்படும் அளவுக்கு இங்கு யாருக்கும் அதிகத் தொகை கொடுக்கப்படவில்லை.

கே : இன்னும் அதிகத்தொகை கொடுத்தால், மேலும் அதிக அளவில் சாதிக்க முடியும் அல்லவா?

ப : சாதிக்கக் கூடும் என்றாலும் அதை நாங்கள் விரும்பவில்லை. இங்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர்—சிவகுமார் என்பவர் இருந்தார். அவர் எங்களிடம் சொன்னதெல்லாம், "இப்படி தீவிர இயக்கக் காலத்தில் அதிகத் தொகை கொடுத்து விட்டுப் பிறகு சாதாரண காலத்தில் தொகையைக் குறைத்துக் கொடுத்தால் உரிய பலன் கிடைக்காமல் போய் விடக்கூடும். இதே தொகையைக் கடைசிவரையிலே கொடுக்க வேண்டும்" என்பதுதான். அவருடைய இந்த அறிவுரை நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது என்பது எனது கருத்து.

கே : இந்த வகையிலும் இந்த மாவட்டம் மற்ற மாவட்டங்களிலிருந்து வேறுபடுகிறது—அதாவது அதிகப்படி ஈட்டுத் தொகை என்று இல்லாமல் ஆர்வத்தோடும், அக்கறையோடும் வந்து அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறார்கள் என்கிறீர்கள். இந்த மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு என்ன என்று சொல்கிறீர்களா?



**மதுரை மாவட்டம் சமயநல்லூர் குடும்பநலத் திட்ட மருத்துவமனை குடியிருப்பு இல்லங்களை—பேராசிரியர் அவர்கள் திறந்துவைக்க வருகை தந்த போது, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் மாலையிட்டு வரவேற்றார்.**

ப: இதுவரை-குடும்பநலத் திட்டம் என்று ஆரம்பித்த காலத்திலிருந்து ஏறத்தாழ முப்பதாயிரம் பேருக்கு அறுவைச் சிகிச்சைகள் செய்திருக்கிறோம். இந்த மாவட்டத்தின் மக்கள் தொகை ஐந்து லட்சம்தான். எங்களுக்கு ஒவ்வொரு மாதமும் முன்பு 202 என்று இலக்கு நிர்ணயித்திருந்தார்கள்; இப்போது 252 என்று ஆக்கியிருக்கிறார்கள். இதிலே ஏறத்தாழ ஒவ்வொரு மாதமும் இந்த இலக்கை நாங்கள் அடைந்து வருகிறோம். அரசாங்கம் ஒவ்வொரு மாதமும் அளிக்கிற அறிக்கையிலே கூட, எங்கள் மாவட்டம் முதலில் இருக்கிறது என்பதை அறிவித்து வருகிறார்கள்.

கே: இருவாரவிழா நடைபெறும் போது அதிக அளவில் அறுவைச் சிகிச்சைகள் நடைபெறுவதுண்டா?

ப: இருவார விழாக் காலத்தில் ஒரு நூறு அல்லது இருநூறு அறுவைச் சிகிச்சைகள் அதிகப்படியாக நடைபெறும்.

கே: தஞ்சை மாவட்டப் பாணியிலான 'நல்வாழ்வு' நிலையம் போன்று நீங்கள் இங்கு அமைக்கவில்லை அல்லவா?

ப: இல்லை. எப்போதும் உள்ள வசதியைக் கொண்டுதான் நடத்தி வருகிறோம்.

கே: இந்த மாவட்டம் மலைப் பகுதியாக உள்ளதால், தொலை தூரத்தில் உள்ள மக்களையெல்லாம் நீங்களே அழைத்து வந்து அறுவைச் சிகிச்சை செய்கிறீர்களா? அல்லது அவர்களே தங்கள் சொந்தச் செலவில் வருகிறார்களா?

ப: தொலை தூரத்தில் இருக்கும் கிராமவாசிகள், அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள விரும்பித் தங்களுக்கு வசதி இல்லை என்று தெரிவித்தால் அவர்களை நாங்களே அழைத்து வந்து, அறுவைச் சிகிச்சை செய்து அனுப்பி வைக்கிறோம்.

கே: இந்த மாவட்டத்தில் எந்தெந்த வகுப்பைச் சேர்ந்த மக்கள் இருக்கிறார்கள்.

ப: 'படுகர்' என்ற சமுதாயத்தினர்தாம் பெருமளவில் இருக்கிறார்கள்.

கே: 'தோடர்'கள் என்னும் பழங்குடி மக்களும் இருக்கிறார்கள் அல்லவா?

ப: தோடர்களுக்கெல்லாம் அறுவைச் சிகிச்சை செய்தல் வேண்டாம் என்பது அரசாங்க உத்தரவு. ஏனென்றால் அவர்களது மக்கள் தொகை நாளடைவில் அருகிப்போய், மிகக் குறைந்த எண்ணிக்கையினரே இப்போது உள்ளனர்.

கே: அவர்களாக விரும்பி அறுவைச் சிகிச்சை செய்யும்படி கேட்பது உண்டா?

ப: அப்படிச் சிலர் கேட்டிருக்கிறார்கள். என்றாலும் நாங்கள் அவர்களுக்குச் செய்வதில்லை.

கே: அப்படியென்றால், தோடர்களிடையே கூட, இந்தப் பிரச்சாரம் நல்ல பலனைத் தந்திருக்கிறது போலும்!

ப: ஆம்!

கே: இந்த மாவட்டத்தில் படித்த மக்கள் அதிகமாக வந்து அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்களா? படிக்காதவர்கள்தாம் அதிகமாகச்செய்து கொண்டிருக்கிறார்களா?

ப: படித்தவர்களைவிடப் படிக்காதவர்கள்தாம் இங்கு அதிகம். அவர்கள்தாம் இங்கே அதிகமாகச் செய்து கொள்கிறார்கள். படித்தவர்களும் தாங்களே விரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள்.

கே: அறுவைச் சிகிச்சைகள் எந்தெந்த இடங்களில் நடைபெறுகின்றன?

ப: அரசாங்க மருத்துவமனைகளிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் நடைபெறுகின்றன. மருத்துவமனைகளில்தான் ஆண் மருத்துவரும், பெண் மருத்துவரும் இருக்கிறார்கள். அங்குதான் இருவித அறுவைச் சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஆண் அறுவைச் சிகிச்சை மட்டும்தான் நடைபெறுகிறது. கருத்தடை வளையம் பொருத்துதலும் நடைபெறுகிறது.

கே: மலைப் பகுதியான இந்த மாவட்டத்தில் மலைத் தோட்டங்களெல்லாம் இருக்கின்றனவே, அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்காக ஏதாவது தனியாக ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?

ப: ஆரம்பத்திலே நான் இங்கே பணி ஏற்ற காலத்திலே தோட்ட அதிபர்களையெல்லாம் சந்தித்து, இதைப்பற்றி எடுத்துச் சொன்னோம். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "தொழிலாளிக்கு, ஒவ்வொரு குழந்தை பிறக்கும்போதும் ஒரு மூன்று மாதச் சம்பளத்தை அவர்களுக்குக் கொடுக்கிறோம். அதை நிறுத்தினால்தான் இந்தத் திட்டம் வெற்றி பெறும்" என்றார்கள். 'அதை நிறுத்த முடியாதா?' என்று கேட்டதற்கு, "அதை நிறுத்துவது மத்திய அரசினுடைய கையில் இருக்கிறது. அதற்கு ஏதாவது ஒருவழி செய்யுங்கள்" என்று சொன்னார்கள். அது அவ்வளவு எளிதில் நடைபெறுகிற காரியமல்ல; விளம்பரத்தின் மூலமாக மக்கள் மனத்தில் மாற்றம் ஏற்பட ஏதாவது செய்து பார்க்கலாம் என்று, தொழிலாளர்களையெல்லாம் தனித்தனியாகச் சந்தித்து, குழுக்கூட்டங்கள் எல்லாம் போட்டு, அவர்களோடு விவாதங்களெல்லாம் செய்தோம். அப்படிச் சொல்லும்போது, ஆரம்பத்தில் எதிர்ப்பெல்லாம் இருந்தது. அதற்கு அவர்கள் சொன்ன காரணம் என்னவென்றால், "எங்களுக்கு ஒரு ஐந்து அல்லது ஆறு குழந்தைகள் இருந்தால், ஒவ்வொரு குழந்தைக்கும் 10 அல்லது 12 வயது ஆனவுடனே, தோட்டத்திலேயே தொழிலாளியாக வேலை செய்ய அவர்களும் வந்து விடுகிறார்கள். தினம் இரண்டு அல்லது மூன்று ரூபாய் கூலி வந்தால் எங்களுக்கு ஒரு நாளைக்குப் பத்துப் பன்னிரண்டு ரூபாய் கிடைக்கும். அதனாலே எங்களுக்கு அதிகக் குழந்தைகள் இருப்பதுதான் நல்லது" என்று சொன்னார்கள்.

இந்த எண்ணத்தை முறியடிப்பதற்கு, நாங்கள் என்ன செய்தோம் என்றால், "இதுமாதிரி ஏழு எட்டுக் குழந்தைகளையும் நீங்கள் தொழிலாளர்களாகவே ஆக்கி தொழிலாளர் சமுதாயமாக ஆக்கிக்கொண்டு போவதைவிட, ஓர் இரண்டு மூன்று குழந்தைகள் மட்டும் இருந்தால், அவர்களை நன்றாகப் படிக்கவைத்து, அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைக்கச் செய்யலாம். டாக்டர்களாகவோ, எஞ்சினியர்களாகவோ ஆக்கலாம். அப்படிச் செய்தால், எதிர்காலத்திலே அந்தப் பிள்ளைகள், உங்களை வாழ்த்துவார்கள்" என்றெல்லாம் எடுத்துச் சொல்லி, அவர்கள் மனத்தை நாங்கள் மாற்றிக் கொண்டு வருகிறோம்.

மேலும். இங்கு ஒரு தனிப்பட்ட நிறுவனம்—'Family Planning Association of India' என்ற ஓர் அமைப்பு இந்தத் தோட்டத் தொழிலாளர்களிடையே மட்டும் பிரச்சாரம் செய்வதற்கென்று, குன்னூரில் இருந்து வருகிறது.

குன்னூரிலே அவர்கள், Selected Estates என்று ஒரு ஐந்தாறு தோட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் மட்டும் அவர்கள் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள்.

கே: அவர்களுக்கு அரசாங்க உதவி இருக்கிறதா?

ப: அரசாங்கமும் உதவுகிறது; அந்த நிறுவனமும் தனது சொந்த நிதியைக்கொண்டு செலவிடுகிறது. குடும்பநலப் பிரச்சாரப் பணிகளையெல்லாம், அவர்களே அந்த நான்கைந்து எஸ்டேட்டுகளில் மட்டும் செய்து வருகிறார்கள். அந்த எஸ்டேட் மக்களுடைய மனப்பான்மையை அவர்கள் மாற்றி வருகிறார்கள். அறுவைச் சிகிச்சை மட்டுமல்லாமல் குழந்தைகளுக்குரிய நோய்த் தடுப்பு ஊசி போடுவது, சத்துணவு வழங்குவது போன்றவற்றையெல்லாம் அவர்களே மேற்கொண்டிருக்கின்றனர். இதனாலே, தோட்டத் தொழிலாளர்களிடையே நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

கே: தோட்ட முதலாளிகள் பணம் கொடுப்பதுதான் குடும்ப நலத் திட்டத்துக்கு இடையூறாக உள்ளது. அதை முதலாளிகள் நிறுத்தினால்தான் அவர்களிடையே குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்கிறீர்களா?

ப: பணம் கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்றால் அதற்கு இந்திய அரசாங்கம்தான் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்திய அரசாங்கச் சட்டம் காரணமாகத்தான் முதலாளிகள் பணம் கொடுக்கிறார்கள். ஆனால் குடும்பநலத் திட்டத்தை அதிக அளவில் தொழிலாளர்கள் ஏற்றுக் கொண்டால், அதை முதலாளிகளும் வரவேற்பார்கள். அதனால் அவர்களுக்கும் இலாபம் இருக்கிறது.

கே: பொதுநலத் தொண்டில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் ஆகியோருடைய ஒத்துழைப்பு எல்லாம் இருக்கிறது அல்லவா?

ப: இருக்கிறது. அதோடு, அரசியல் தலைவர்களெல்லாம் ஒத்துழைக்கிறார்கள்.

கே: அரசாங்கத்தின் மற்றத் துறைகளைச் சேர்ந்தவர்களும் உங்கள் துறையுடன் இணைந்து பணியாற்றுகிறார்கள் அல்லவா?

ப: இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வருவாய்த் துறையினர் மிகவும் அதிகமாக ஒத்துழைக்கிறார்கள். அடுத்தபடியாகக் கல்வித்துறையினர் நல்ல முறையில் ஒத்துழைக்கிறார்கள். மாதாமாதம் நடைபெறும் அறுவைச் சிகிச்சைகளுக்குக் குறைந்தது ஒரு பத்துச் சத விகிதத்தினரை ஆசிரியர்கள்தாம் அனுப்பி வைக்கிறார்கள்.

மேலும், ஊராட்சி ஒன்றியத்தினரும் ஒத்துழைக்கிறார்கள். கிராம சேவக்குகள், வளர்ச்சி வட்டார விரிவாக்க அலுவலர்கள்



**மதுரை மாவட்டம் சமயநல்லூர் குடும்பநலத் திட்ட மருத்துவமனை, குடியிருப்பு இல்லங்களை—பேராசிரியர் அவர்கள் திறந்து வைக்கிறார்.**

159879

போன்ற ஒன்றிய ஊழியர்களுக்கெல்லாம் ஓர் இலக்கு நிர்ணயித்து, மாதந்தோறும் அந்த இலக்கை அவர்கள் நிறைவேற்றவில்லை என்றால் அவர்களிடம் விளக்கம் கேட்கப்படுகிறது.

கே: விளக்கம் கேட்பது மட்டுந்தானா? அவர்கள்மீது வேறு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப் படுகிறதா?

ப: விளக்கம் கேட்பதோடு சரி. விளக்கம் கேட்டாலே அவர்கள் தங்கள் இலக்கை நிறைவேற்றி விடுவார்கள். விளக்கம் கேட்பது என்பது, ஒருவேளை அவர்களுக்கு ஆர்வம் இல்லாமல் இருக்குமானால், ஆர்வம் காட்டச் செய்வதற்காகத்தான்.

கே: கட்டாயமாக அறுவைச் சிகிச்சைக்கு யாரையும் அழைத்து வருவதுண்டா?

ப: கட்டாயமோ, வற்புறுத்தலோ இதில் இல்லை.

கே: பிரச்சாரப் பணியில் நாடகம், கலைநிகழ்ச்சிகள் எல்லாம் நடத்துகிறீர்களே, அதை யார் நடத்துகிறார்கள்?

ப: சென்னையிலிருந்து தலைமை அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்படும் குழுவினர்தாம் அதை நடத்துகிறார்கள். ஆனால் இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை தெருக்கூத்து, வில்லுப்பாட்டுப் போன்றவைகளையெல்லாம் மக்கள் அவ்வளவாகப் புரிந்து கொள்வதில்லை. நாடகங்கள் மட்டுந்தான் நடத்தி வருகிறோம். நாடகங்களைப் பார்த்து நன்றாக விளக்கம் பெறுகிறார்கள். நாடகங்களை நடத்துவதனாலேயே நல்ல பலன் கிடைக்கிறது.

கே: அப்படியென்றால், மற்ற மாவட்டங்களைவிட உங்களுக்கு அதிக நாடகங்கள் நடத்தவாய்ப்பு அளித்தால் மேலும் நல்ல பலன் கிடைக்கும் இல்லையா?

ப: ஆம்! நல்ல பலனை எதிர் பார்க்கலாம்.

கே: எல்லா மதத்தினரும் வந்து அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறார்களா?

ப: ஆம்.

கே: மத எதிர்ப்பு ஏதேனும் உள்ளதா?

ப: இங்கு மக்கள் தொகை விகிதாச்சாரப்படி பார்த்தால், கிருத்துவர்களும், முஸ்லிம்களும் அவர்கள் விகிதாச்சாரத்துக்கேற்ப அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 'நீங்கள் வெளியில் சொல்லாதீர்கள், நாங்கள் வந்து அறுவைச் சிகிச்சை செய்துகொள்கிறோம்' என்கிறார்கள். வெளியிலே தெரியாதவாறு அவர்கள் வந்து அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறார்கள்.

கே: அறுவைச் சிகிச்சைகள் பற்றிப் புகார் ஒன்றும் வருவதில்லையா?

ப: ஏதுமில்லை.

கே: இங்கு பிரச்சாரப் பணி நன்றாக நடந்தால் நல்ல பலன் கிடைக்கும் என்று தெரிகிறது. விளம்பரம் மூலமாகத்தான் நீங்கள் இவ்வளவு பெரிய சாதனையைப் புரிந்திருக்கிறீர்கள்; அப்படித்தானே?

ப: வெற்றிக்குக் காரணம் பெருமளவு பிரச்சாரம்தான்; மற்ற அதிகாரிகளின் ஒத்துழைப்பும் இருக்கிறது. இருந்தாலும், பிரச்சாரப்பணிதான் அதில் முக்கிய இடம் பெறுகிறது.

மேலும், இந்த மாவட்டத்தில் பணியாற்றுகிற களப்பணியாளர்கள் மிகவும் கலையுணர்வு உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதை நான் அறிந்திருந்தேன். ஓர் ஆண்டு தலைமை அலுவலகத்திலிருந்து நாடகக் குழுவினரை அனுப்பி வைப்பதில் தாமதம் ஏற்பட்டது. அப்போது, நானே ஓர் ஓரங்க நாடகத்தை எழுதினேன். 'எமலோகத்திலே ஒரு நாள்' என்பது அந்த நாடகத்தின் பெயர். அதை எங்கள் களப்பணியாளர்களைக் கொண்டு நடத்திக் காட்ட ஏற்பாடு செய்தேன். அவர்கள், அந்த நாடகத்தை ஏறக்குறைய முப்பது இடங்களில் சிறப்பாக நடத்தினார்கள். அந்தப் பிரச்சாரம் நல்ல பலனையும் தந்தது.

வெற்றிக்கு மற்றொரு முக்கிய காரணம், எங்கள் மாவட்டக் குடும்பநலத் திட்ட அமைப்பைப் பொறுத்த வரையிலே, மாவட்டக் குடும்பநல அதிகாரியாக உள்ள டாக்டர் அய்யாசாமி ஆவார். இதற்கு முன்னாலே டாக்டர் வர்கீஸ், டாக்டர் வேணுகோபால் என்பவர்கள் இந்தப் பொறுப்பில் இருந்திருக்கிறார்கள்.

குடும்பநல அதிகாரி, குடும்பநல விளம்பர அலுவலரான நான், மருத்துவர்கள், நிர்வாக அதிகாரி, மற்றும் செயலகத்தில் உள்ள அத்தனைப் பேரும் ஒரு குழுவாக இருந்து பணியாற்றி வருவது இந்த வெற்றிக்கெல்லாம் இன்னொரு முக்கிய காரணம் ஆகும்.

கே: நீங்களெல்லாம் ஒரே குழுவாக இருந்து பணியாற்றியதாகச் சொன்னீர்கள். மற்ற மாவட்டங்களிலெல்லாம் இத்தகைய ஒத்துழைப்பு இல்லை என்று கருதுகிறீர்களா?

ப: மற்ற மாவட்டங்களைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை எங்கள் மாவட்டக்குடும்பநலத் துறை ஓர் எடுத்துக் காட்டு என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், மாநில குடும்பநலத் துறை விளம்பரத் துணை இயக்குநர் அண்மையில் இங்கு வந்திருந்தார். நாங்கள் இங்கு ஒருமித்தக் கருத்தோடு பணியாற்றுவதைக் கண்டு மிகவும் பெருமைப் பட்டு, அவர் எங்களையெல்லாம் பாராட்டினார்.

பேட்டி: மா. செங்குட்டுவன்



# செங்கை மாவட்டக் கருத்தரங்கின் பரிந்துரைகள்

செங்கை மாவட்டக்குடும்பநலக் கருத்தரங்கு, 4-8-73 அன்று கடம்பத்தூரில் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் கிராமத் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டது. அவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிந்து பின்வரும் தலைப்புக்களில் கலந்துரையாடிப் பரிந்துரைகளை அளித்தனர்.

1. கருத்தடைச் சாதனங்கள்.
2. கருத்தடை அறுவைச் சிகிச்சை.
3. விளம்பரமும், பணியாளர் கடமையும்.
4. மகளிர் கடமை.

## பரிந்துரைகள்

குடும்பநலத் திட்டத்தைத் தீவிர முறையில் செயல்படுத்தப் பின்வரும் பரிந்துரைகள் அளிக்கப்படுகின்றன.

1. தீவிர இயக்கக் காலம் மட்டும் அன்றி, எல்லா நாட்களிலும் குடும்பநலத் திட்டப்பிரச்சாரமும், சீரிய முறையில் சேவையும் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. அறுவைச் சிகிச்சை, தேர்ச்சி பெற்ற மருத்துவர்களைக் கொண்டும், பின்விளைவு ஏதுமின்றியும் செய்யப்படல் வேண்டும்.

3. புதிய முறையில் பெண் அறுவைச் சிகிச்சை செய்யக் குறைந்த பட்சம் தாலுகா அளவிலாவது வசதிகள் செய்யப்படல் வேண்டும்.

4. ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் படுக்கை வசதிகள் செய்யப்படல் வேண்டும்.

5. அறுவைச்சிகிச்சைக்குப்பிறகு குடும்பநலக் களப்பணியாளர்கள் சீரிய முறையில் பின் தொடர் நடவடிக்கைகளை எடுத்தும், அடிக்கடி ஆலோசனை கூறியும் வந்தால் கோளாறு ஏற்படுவதைத் தடுக்கலாம்.

6. உயர் அலுவலர்கள், களப் பணியாளர்களின் நடவடிக்கைகளைத் தீவிர முறையில் கண்காணித்தல் வேண்டும்.

7. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு தரும் ஈட்டுத் தொகை, எந்தக் காலத்திலும் ஒரே மாதிரியாகவும், ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே அளவாகவும் இருத்தல் வேண்டும்.

8. தற்போது நிலவி வரும் வழக்கமாகிய, முனைப்பு இயக்கக் காலத்தில் குடும்பநலப் பணியாளர்களை வட்டார வளர்ச்சி அலுவலரின் மேற்பார்வையில் பணியாற்றும் நிலை எல்லா நாட்களிலும் இருக்கும்படி செய்தால் நல்ல பலன் கிட்டும்.

9. குடும்பநலச் சேவைகளையும், கல்வியையும் கிராமப்புறங்களில் தீவிரப்படுத்த, பகுதிவாழ் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளித்துப் பயன்படுத்துதல் வேண்டும்.

10. மக்கள் தொகை இயல் கல்வியைப் பள்ளிக்கூடத்தில், உயர்நிலை மட்டத்தில் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். பாடத் திட்டத்தின் மூலமும், அதன் தொடர்புடைய நடவடிக்கைகள் மூலமும் செய்தல் நலம்.

11. குடும்பநல விளம்பரப் பணி வானொலி மூலம் தீவிரப் படுத்தப் படல் வேண்டும். விவசாய நிகழ்ச்சிகள் மாதிரி தினமும் குறிப்பிட்ட காலத்தில் ஒலி பரப்புதல் நல்லது.

12. குடும்பநல விளம்பர அறிக்கைகள், புத்தகங்கள் மற்றும் சாதனங்களை, தலைவர்களைக் கொண்ட கிராமக் குழுக்களின் மூலமும், நூலகங்களின் மூலமும் வழங்கச் செய்தல் வேண்டும்.

13. குடும்பநலத் திட்டம் தீவிர முறையில் செயல்பட, குழந்தை நலம், மகளிர் நலம், மற்றும் சத்துணவுத் திட்டம், சுற்றுப்புறச் சுகாதாரம், நோய்த் தடுப்புத் திட்டம் ஆகியவைகள் இணைந்தும், தீவிரமாகவும் செயல்படல் வேண்டும்.



கடம்பத்தூர் வெற்றிவிழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்

# நலவழி நடப்பு

## வட ஆர்க்காடு மாவட்டத்தில் பேராசிரியர்

நடந்த ஜூலை 26, 27 ஆகிய நாட்களில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு, குடும்பநலத் திட்டங்களைக் கிராம மக்களுக்குப் புரியும் வகையில் விளக்கினார்.

அமைச்சர் அவர்களுடன் செய்யாறு தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் (இன்றைய சட்டப் பேரவைத் தலைவர்) புலவர் கா. கோவிந்தன், பெரணமல்லூர்த் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. பூ. எட்டியப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கோ. விசுவநாதன், வடஆர்க்காடு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் திரு. பாபு சனார்த்தனம் ஆகியோரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

### பெரியகொழப்பலூர்

பெரணமல்லூர் ஊராட்சிஒன்றியத்தைச் சேர்ந்த பெரியகொழப்பலூரில் மூன்றுலட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட, அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையம், குடும்பநல நிலையம், அலுவலர் குடியிருப்பு இல்லங்கள் ஆகியவற்றைப் பேராசிரியர் அவர்கள் திறந்துவைத்து அரியதொரு உரை நிகழ்த்தினார்.

விழாப்பந்தல் நுழைவாயிலில், குடும்பநலத்துறைத் துணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் லிங்கையா, அமைச்சருக்கு மாலையணிவித்து வரவேற்றார்.

ஊராட்சி ஒன்றியத்தின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. பூ. எட்டியப்பன் தலைமையில் விழா தொடங்கியது.

வடஆர்க்காடு மாவட்ட குடும்பநல விளம்பர அலுவலர் திரு. எஸ். அப்பர்சுந்தரம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அடுத்து, புலவர் கோவிந்தன் எம்.எல்.ஏ., திரு. கோ. விசுவநாதன், எம்.பி., கோட்டாட்சித் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன், வ.ஆ. மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் திரு. பாபு சனார்த்தனம், கொழப்பலூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கே. நாராயணசாமி, குடும்பநலத்துறைத் துணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் லிங்கையா, மாவட்டக் குடும்பநல அதிகாரி டாக்டர் அப்பாவு ஆகியோர் உரையாற்றிய பின், பேராசிரியர் அவர்கள் உரையாற்றினார். மாவட்டக் குடும்பநல அதிகாரி டாக்டர் சி. கே. தீர்த்தகிரி நன்றி நவின்றார்.

### அரசம்பட்டு

பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அரசம்பட்டுக் கிராமத்தில் ஒன்பதாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மகப்பேறு இல்லத்தைப் பேராசிரியர் அவர்கள் திறந்து வைத்தார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் பூ. எட்டியப்பன், எம்.எல்.ஏ விழாவுக்குத் தலைமை வகித்தார். மாநிலக் குடும்பநலத்துறைத் துணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் டி. எம். லிங்கையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

புலவர் கா. கோவிந்தன், திரு. கோ. விசுவநாதன், எம்.பி., திரு. பாபு சனார்த்தனம், அரசம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் திரு. எஸ். முனுசாமிக் கவுண்டர் ஆகியோர் பேசியபின், பேராசிரியர் அவர்கள் மகப்பேறு இல்லத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்.

பகல் 1 மணியளவில் கொளுத்தும் வெயிலில் நடைபெற்ற இந்த விழாவில் ஆயிரக்கணக்கான கிராம மக்கள் குழுமியிருந்தனர். அதிலும் தாய்மார்கள் ஏராளமாக வந்து உற்சாகத்துடன் கலந்து கொண்டு அமைச்சரின் பேச்சை ஆர்வத்துடன் கேட்டது குறிப்பிடத்தக்கது.

### ஆக்கூர்

27-7-73 அன்று அனகாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆக்கூரில் அரசினர் உயர் தொடக்கப் பள்ளியையும், ரூ. 1,71,000 செலவில் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையத்தையும் பேராசிரியர் அவர்கள் திறந்து வைத்தார். இந்த விழாவில் புலவர் கா. கோவிந்தன், திரு. கோ. விசுவநாதன், எம். பி., திரு. பாபு சனார்த்தனம், குடும்பநலத் துறைத் துணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் லிங்கையா, மாவட்டக் குடும்பநல அதிகாரி டாக்டர் தீர்த்தகிரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவுக்கு, ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. கோபாலகிருஷ்ண முதலியார் தலைமை வகித்தார். விழாத் தொடக்கத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சுந்தரேச முதலியார் அனைவரையும் வரவேற்றார். ஊராட்சி மன்றச் சார்பிலும், ஒன்றியத்தின் சார்பிலும் அமைச்சருக்கு வரவேற்பு மடல் படித்தளிக்கப்பட்டது. மாவட்டக் குடும்பநல விளம்பர அலுவலர் திரு. எஸ். அப்பர் சுந்தரம் நன்றி கூற, விழா இனிது முடிவுற்றது.

### திருச்சி வானொலியில் உரையாடல்

திருச்சி வானொலியில் "மக்கள் தொகை இயல் கல்வி" பற்றிய உரையாடல் நிகழ்ச்சி ஆகஸ்டு 18-ஆம் நாள் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்காக ஒலிபரப்பப்பட்டது.



தஞ்சை மாவட்டக் குடும்பநல விளம்பர அலுவலர் திரு. வ. இராசமனோகரன், காரைக்குடி டாக்டர் அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வர் டாக்டர் திருவேங்கடாச்சாரி, திருச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் செல்வி மீனாட்சி ஆகியோர் "நல்வாழ்வுச் சமுதாயம் காண மக்கள் தொகையியல் கல்வி" பற்றி விவாதித்தனர். திருச்சி வானொலி நிலையத்தின் சார்பில் திரு. கோ. செல்வம் பங்கேற்றார்.

### நீடாமங்கலத்தில் புதுக்கட்டிடத் திறப்பு விழா

தஞ்சை மாவட்டம், நீடாமங்கலம் ஆரம்பச் சுகாதார நிலையத்தைச் சார்ந்த குடும்பநல நிலையம், குடியிருப்பு இல்லங்கள் ஆகியவற்றை 25-8-73 அன்று தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவிற்கு மன்னைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. பாலகிருஷ்ணன் தலைமை ஏற்றார். விழாவிற்கு வந்திருந்தோரை, தஞ்சை மாவட்டக் குடும்பநல விளம்பர அலுவலர் திரு. இராசமனோகரன் வரவேற்றார். செயற்பொறியாளர் திரு. வரதராசன் கட்டிட அறிக்கையை வாசித்தார்.

வலங்கைமான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சித்தமல்லி சோமசுந்தரம், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. பாலசுப்பிரமணியம், மன்னார்குடி சேர்மன் திரு. சு. நாராயணசாமி, பேரூராட்சி மன்றத்தலைவர் திரு. இராசகோபால், முன்னாள் பேரூராட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியம், திராவிடர் கழகத் தலைவர் திரு. ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் அய்யாத்துரை நன்றி கூறினார். குடும்பநலப் பொருட்காட்சியும், திரைப்படக்காட்சியும் மாவட்டக் குடும்பநலத் திட்ட அமைப்பால் நடத்தப்பட்டன.

### குட்டி "லூப்" முகாம்! சேலத்தின் பெரும் சாதனை!

தாய்மார்களிடையே கருத்தடை வளையத்திற்கு ("லூப்") நல்லதோர் ஆதரவை நிலைநாட்டும் வகையில், 1973 ஜூலையில் சேலம் மாவட்டக் குடும்பநலத் திட்டச் செயலகத்தினரால் குட்டி "லூப்" முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டது.

மூன்று, நான்கு வட்டாரங்களை ஒருங்கிணைத்து, ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு தாய்மார்களை அழைத்து வரும்படி களப்பணியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். குடும்பநலச் செயலகத்திலுள்ள இரு பெண்மருத்துவர்களும், மற்ற மருத்துவமனைகளிலுள்ள பெண் மருத்துவர்களும் லூப் பொருத்தும் பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டனர்.

இந்த ஏற்பாடுகள் பற்றி மாவட்டம் முழுவதும் விரிவான வகையிலும், பயனுள்ள முறையிலும் பிரச்சாரம் செய்யப் பட்டது. அதன் விளைவாக, 1973 ஜூலை மாதத்தில் மாவட்டத்தில் மொத்தம் 705 தாய்மார்களுக்கு லூப் பொருத்தப்பட்டது. சேலம் மாவட்டத்தில் மாதம் 200 லூப்கள்தான் பொருத்தப்படுவது வழக்கம். இதனைநோக்குகையில் இந்தச் சாதனை மகத்தானதாகும். இந்த 705-ல், குடும்ப நலத் திட்டச் செயலகத்திலுள்ள இரு பெண் மருத்துவர்கள் மட்டும் 236 லூப்கள் பொருத்தினர்.

சேலம் குட்டி லூப் முகாம்களுக்குத் தனியாக எதுவும் செலவழிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### சேலம் மாவட்டத்தில் கலைநிகழ்ச்சிகள்

சேலம் மாவட்டத்தில், சேலம் தலைமை மருத்துவமனையில் நடைபெற்ற "டுபக்டமி" (பெண் அறுவைச்சிகிச்சை) முகாமையொட்டி, மாவட்டம் முழுவதும் குடும்பநலக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆகஸ்டு 10-ஆம் தேதி முதல் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் 56 குடும்பநலக் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பொது மக்கள் ஏராளமான அளவில் இந்தக் கலைநிகழ்ச்சிகளைக் கண்டுகளித்துப் பயன் அடைந்தனர்.

## விருதுநகரில் கவியரங்கு

இராமநாதபுரம் மாவட்டக் குடும்பநலத் திட்டக் கவியரங்கு, மேலவை உறுப்பினர் திரு. செயராம ரெட்டியார் முன்னிலையில், கவிஞர் சுரதா தலைமையில் 27-3-73-ஆம் நாள் விருதுநகர் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

இம்மாவட்டக் குடும்பநலத் திட்ட விளம்பர அலுவலர் திரு. எச். நாகூர் மீரான் கவிதையிலேயே வரவேற்புரையாற்றினார்.

கவிஞர் அமலன், கவிஞர் முடியரசன், கவிஞர் மனசை ப. கீரன், கவிஞர் டாக்டர் தமிழண்ணல், கவிஞர் கனகசபாபதி ஆகியோர் வெவ்வேறு தலைப்புகளில் தங்கள் தங்கள் கவிதைகளைப் பாடினர்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மூர்த்திராஜ், குடும்பநலச் செய்திக்கதிரின் துணை ஆசிரியர் திரு. எஸ். முத்துராமலிங்கம் ஆகியோர் பேசினர். இறுதியாக, சிவகாசியிலுள்ள உதவி ஆட்சித் தலைவர் திரு. டி. எம். ஆறுமுகம் நன்றியுரையைக் கவிதையிலேயே பாடினார். நாட்டு வாழ்த்துடன் கவியரங்கம் முடிவுற்றது.

# முன்னோடி நல்வாழ்வு நிலைய முறை

திருமங்கலம் ஒன்றியத்திற்குச் செக்கானூரணியில் ஆரம்பச் சுகாதார நிலையம் உள்ளது. தஞ்சை மாவட்டப் பாணியை யொட்டி இங்கு நல்வாழ்வு நிலையம் அமைத்துச் செயல் படுத்தப்பட்டது, முனைப்பு இயக்கம். சிறப்பாக இந்த ஆரம்பச் சுகாதார நிலையம் 'முன்னோடி நல்வாழ்வு நிலையம்' என்ற ஒன்றை நல்வாழ்வு நிலையத்தோடு கூடவே சேர்த்து அமைத்து, முனைப்பு இயக்கத்தில் புதுமை காட்டி நல்ல வெற்றி பெற்றுள்ளது.

அறுவைச் சிகிச்சைக்கென வரும் தந்தைமார்கள் 'புறநோயாளிகள்' (Out-Patient) பகுதியில் தங்க விரும்புவதில்லை. அங்கு காத்திருந்தால், பிற நோய்களுக்கெனச் சிகிச்சை பெற வரும் தங்கள் உறவினர்கள், தெரிந்தவர்கள் ஆகியோரைச் சந்திக்க வேண்டியிருக்குமே எனக் கூச்சப்படுகிறார்கள்.

குடும்பநல அறுவைச் சிகிச்சை நடக்கும் இடத்திற்கு அருகிலேயே அவர்களைத் தங்கச் செய்தால் வேண்டாத எண்ணங்களுக்கு ஆட்பட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள தந்தைமார்கள் சென்று விடக்கூடும்.

சென்ற ஆண்டு முனைப்பு இயக்கத்தின் போது பல்வேறு முயற்சிகளுக்குப் பின், அரிதின் முயன்று அழைத்து வரப்பட்ட தந்தைமார்கள் கடைசி நேர மனமாற்றத்தால் அறுவைச் சிகிச்சை நிலையம் வரை வந்தவர்கள் நிரந்தரக் கருத்தடை முறையை ஏற்காமலேயே திரும்பி விட்டனர். இப்படிப்பட்ட அனுபவ அறிவின் துணை கொண்டு சிந்தித்தபோது பிறந்ததுதான் 'முன்னோடி நல்வாழ்வு நிலைய முறை' யாகும்.

செக்கானூரணி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் இருந்த சிறு கட்டிடத்தில் 'முன்னோடி நல்வாழ்வு நிலையம்' அமைக்கப்பட்டது. திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் துணை கொண்டு கொட்டகையும் அங்கு போடப்பட்டது. பத்திரிகைகள், பொது சுகாதார விளக்கங்களை கொண்ட துண்டுவெளியீடுகள், குடும்பநலத் திட்டத்தின் அவசியத்தை விளக்கும் துண்டு வெளியீடுகள் ஆகியவை அங்கு வழங்கப்பட்டன. தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் குடும்பநலத் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டு வரும் வசதிகள் பற்றி விளக்கப்பட்டன. மனிதன் உடல் நலம் பேண அன்றாடம் தன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய உணவுப் பழக்கங்கள் பற்றியும் விளக்கப்பட்டன. நல்வாழ்வு, சத்துணவு, குடும்ப நலத்திட்டத்தின் அவசியம் பற்றிய படங்கள் (Film Strips) போட்டுக் காட்டப்பட்டன. அறுவைச் சிகிச்சைக்காக வந்த தந்தைமார்கள் இம்முன்னோடி நல்வாழ்வு நிலையத்தில் தங்கியதன் காரணமாக இறுதிவரை இருந்து அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள். சென்ற ஆண்டு அறுவைச் சிகிச்சைக்கென வந்த தந்தைமார்களில் பலர் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளாமலேயே திரும்பிச் சென்றுவிட்டனர். இவ்வாண்டு செயல் படுத்திய 'முன்னோடி நல்வாழ்வு நிலைய' முறைகாரணமாக செக்கானூரணி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு அறுவைச் சிகிச்சைக்கென வந்த தந்தைமார்களில் யாரும் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளாமல் திரும்பவில்லை. இந்த ஆரம்பச் சுகாதார நிலையம் முனைப்பு இயக்கத்தின் போது 1284 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்துள்ளது. முன்னோடி நல்வாழ்வு நிலையத்தை அமைத்து நடத்திடத் தனிச் செலவு எதுவும் இல்லை. அதற்கெனத் தனி அலுவலர் எவரும் தேவையில்லை. ஏற்கனவே குடும்பநலத் திட்டத்தின் கீழ் பணியாற்றுபவர்களையே பயன்படுத்தலாம்.

—சாமு.



திருமங்கலத்தில் நடைபெற்ற மதுரை மாவட்ட முனைப்பு இயக்க வெற்றி விழாவின்போது, சிறப்பாகப் பணியாற்றிய பல்வேறு துறை ஊழியர்களுக்கென வைக்கப் பட்டிருந்த பரிசுப் பொருள்கள்.



# குழந்தைகள் அதிகமானால் வாழ்க்கைப்படகு கவிழ்ந்துவிடும்!

## செங்கை மாவட்ட வெற்றிவிழாவில் தலைவர்கள், அரசு அலுவலர்கள் கருத்துரை

செங்கற்பட்டு மாவட்டம் ஏனைய மாவட்டங்களைப் போல் 1972—73-ஆம் ஆண்டு, மிகுந்த முன்னேற்பாடுகளோடு குடும்பநல முனைப்பு இயக்கத்தை நடத்திப் பெருவெற்றி ஈட்டியது. இம்மாவட்டம் முனைப்பு இயக்கத்தின்போது 16,000 தந்தைமார்களை நிரந்தரக் கருத்தடை ஏற்கச் செய்ய வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இலக்கை விட ஒரு மடங்கு அதிகமாக 32,420 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்துப் புகழ் சேர்த்துக்கொண்டது, செங்கை மாவட்டம்!

அந்தச் சாதனையின் வெற்றி விழாவும், வெற்றி விழாவையொட்டித் தயாரிக்கப்பட்ட குடும்பநல மலர் வெளியீட்டுவிழாவும், மாவட்டக் குடும்பநலக் கருத்தரங்கமும் 4-8-73-ஆம் நாள் கடம்பத்தூர் அரசினர் கழக உயர்நிலைப் பள்ளியில் மிகச் சிறப்பாக ஒருங்கே நடந்தேறின.

அன்று காலை மாவட்டக் கருத்தரங்கம் நடைபெற்றது. இக் கருத்தரங்கிற்குச் சட்டமன்ற உறுப்பினர் திரு. பரந்தாமன் தலைமை வகித்தார்.


கருத்தரங்கில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்று உரையாற்றிய கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சுப்பராய முதலியார், முனைப்பு இயக்க காலத்தில் இருக்கிற வேகம் சாதாரண காலத்தில் இல்லை என்றும், முனைப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டு, அதற்கென்று இருக்கும் துறையினரே நாள்தோறும் அதனை விறுவிறுப்பாகச் செயல்படுத்த ஆவன செய்தால் நலமாக இருக்கும் என்றும் கூறினார்.



பின் தலைமையுரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் திரு. பரந்தாமன், தமிழ்நாடு, குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தும் சிறந்த மாநிலங்களில் ஒன்றாக இருக்கிறது என்றும், அண்மையில் இந்தியப் பேரரசு இதற்கான செலவினங்களை 50 சதவிகித அளவு குறைத்திருக்கிறது என்றாலும், டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு இந்திய அரசு உதவினாலும், உதவாவிட்டாலும் முனைப்புத் திட்டம் போன்றவற்றைச் செயல்படுத்தும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் சொன்னார்.



மேலும் அவர் பேசுகையில், மக்கள் திட்டம் என்று அறிஞர் அண்ணா அவர்களால் கூறப்பட்ட குடும்பநலத் திட்டத்தை அனைவரும் ஏற்க முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.



அடுத்துப் பேசிய திருத்தணி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. ஸ்ரீராமுலு, குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவது ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் தலையாய கடமை என்றும், தேர்தல் காலத்தில் வீடு வீடாகச் சென்று 'வாக்கு'க் (Vote) கேட்பது போல அக்கறையோடு மக்களைச் சந்தித்து இத்திட்டம்பற்றி விளக்கி ஆவன செய்ய வேண்டுமென்றும், பஞ்சாயத்துச் சட்டமே இதற்கு முதலிடம் கொடுத்து வலியுறுத்துகிறது என்றும், அலுவலர்கள் சொல்லுவதைவிட ஒன்றியத் தலைவர்களும், பொதுத் தொண்டில் ஈடுபட்டுள்ள மற்றவர்களும் சொன்னால் மக்கள் நம்பி ஏற்பார்கள் என்றும் கூறினார்.



செங்கை மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் அண்ணாமலை பேசுகையில், குடும்பநலத் திட்டத்தின் இன்றியமையாமையைக் கூறி, முன்பு இறப்பு விகிதம் அதிகமாக இருந்தது பற்றியும், பிறப்புவிகிதம் குறைவாக இருந்தது குறித்தும் விளக்கி, தற்போது வளர்ந்துள்ள மருத்துவக் கலையால் மனிதனின் சராசரி வயது உயர்ந்திருப்பதுபற்றிச் சொல்லி, இந்தக் கட்டத்தில் குடும்பநலத் திட்டம் ஏற்றுச் சிறு குடும்பம் அமைத்துக்கொள்ள வேண்டியது மிகமிக அவசியம் என்பதை வலியுறுத்தி, திருமண வயதை

உயர்த்த வேண்டுமென்றும், தகுந்த இடைவெளிக்குப்பின் குழந்தைபெற வேண்டுமென்றும் சொன்னார்.

அவரைத் தொடர்ந்து பேசிய வெங்கத்தூர் ஊராட்சித் தலைவர் திரு. நடராசன், செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திறந்து வைத்த விவசாயக் கண்காட்சி, குடும்பநலக் கண்காட்சி, ஆகியவற்றில் ஒன்று உற்பத்திப் பெருக்கத்தை வலியுறுத்துவது என்றும், மற்றொன்று உற்பத்தி பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதுபற்றிவிளக்கம் தருவது என்றும் கூறி, விவசாயப் பெருங்குடி மக்கள் இவை இரண்டின் அவசியத்தையும் உணர்ந்து அரசுக்கு உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.



எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. ஜி. வி. சௌத்திரி, குடும்பநல ஊழியர்கள், தொய்வு—சுணக்கம்—சலிப்பு ஏதுமில்லாமல் கிராம மக்களிடம் இத்திட்டத்தை எடுத்துச் சொல்லி வலியுறுத்த வேண்டுமென்றும், அப்போதுதான் இத்திட்டம் வெற்றி பெறும் என்றும் சொன்னார்.



மணவூர் ஊராட்சித் தலைவர் திரு. தண்டபாணி, இந்திய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கிய காலம்முதல் தமிழ்நாடு தனக்கெனத் தனியொரு இடத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பது மகிழத்தக்க ஒன்று என்றும், இத்தகைய வெற்றிக்குப் பாடுபட்ட மாவட்ட ஆட்சித் தலைவரும், மருத்துவத் துறையின் அங்கமான குடும்பநல விளம்பரத் துறையினரும்—மருத்துவர்களும், ஒன்றிய ஊழியர்களும், பிறரும் நாட்டின் பாராட்டுக்குரியவர்கள் என்றும் கூறினார்.



திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. ஏ. பி. இராமச்சந்திரன், மனிதகுல வாழ்வுக்கு இன்றியமையாத திட்டம், குடும்பநலத் திட்டம் என்றும், இதனை உலகெல்லாம் வலியுறுத்தும் அறிஞர் டாக்டர் சந்திரசேகர் அவர்கள், தங்களுடைய பகுதியிலே பிறந்தவர் என்றும், அரசும், அறிஞர்களும் வலியுறுத்தும் இத்திட்டத்தை உற்சாகம் குன்றாமல் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.



எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருமதி சுந்தரம்மா பேசுகையில், குழந்தைகள் இதுபோன்ற விழாக்களில் பங்கு கொள்ள வாய்ப்புத் தரவேண்டும் என்றும், அவர்களுக்குப் புரிய வைப்பது புதிய துணியில் சாயம் போட்டுக் கெட்டியாகப் பிடிக்கச் செய்வதற்கு ஒப்பானதாகும் என்றும், அப்படிச் செய்தால் எதிர்காலத்தில் ஆணாக இருந்தால் 25-வயதுக்குமேல் திருமணம் செய்து கொள்ளுவான் என்றும், பெண்ணாக இருந்தால் 20 வயதில் திருமணம் செய்து கொள்வாள் என்றும் கூறினார். மேலும் கணவன் மனைவியான பிறகு முறையாக நடந்துகொண்டு குடும்பத்தைக் கட்டுக்குள் வைத்துக் கொள்வார்கள் என்றும், எனவே குழந்தைகளிடையே இக் கருத்தைப் பரப்ப வேண்டுமென்றும் சொன்னார்.




பின்னர் பேசிய தோமூர் ஊராட்சித் தலைவர் திரு. எம். கே. மோகன், தங்கள் பூண்டி ஊராட்சி ஒன்றியம், இன்றைக்கு மாவட்டத்திலேயே முதன்மையாக வந்தது பற்றிப் பெருமைப்படுவதாகவும், பெண்கள் குடும்ப நலத் திட்டத்தைத் தங்கள் தலையாய உரிமை எனக் கருதிச் செயல்பட வேண்டுமென்றும் கூறினார்.



மாதவரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. அண்ணாமலை பேசுகையில், செங்கை மாவட்டம் தனக்குத் தரப்பட்ட இலக்கான 16 ஆயிரத்தைத் தாண்டி 32 ஆயிரம் பேர்களுக்குமேல் அறுவைச்சிகிச்சை செய்து, அந்த வெற்றிக் களிப்பிலே கடம்பத்தூரில் கூடியிருப்பதாகக்கூறி, வெற்றி விழாவோடு பணி முடிந்து விட்டதாக யாரும் கருதக்கூடாது என்றும், தொடர்ந்து தொய்வில்லாமல் இத்திட்ட வெற்றிக்குச் செயல்படாவிட்டால் நாட்டிற்கு எதிர்காலம் இல்லை என்றும் கூறினார்.



பின்னர் பேசிய செங்கற்பட்டு மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு. சண்முகம் குடும்பநலத் திட்டத்தை நினைக்கும் பொழுது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது நினைவுக்கு வருவதாகக் கூறி,



கட்டுப்பாடுள்ள வீட்டில் கண்ணே
மணியே என்ற குரல் கேட்கும்;
கட்டுப்பாடில்லாத வீட்டில்
சனியனே பீடையே
என்ற அர்ச்சனை கேட்கும்

என்றும்,

அளவாகப் பெற்றெடுத்த வீட்டில்
ஆனந்தமிருக்கும்;
அளவில்லாது பெற்றெடுத்த
வீட்டில் அமைதியிருக்காது
என்றும்,

அளவாகப் பெற்றெடுத்த வீட்டில்
வளமையிருக்கும்;
அளவில்லாது பெற்றெடுத்த
வீட்டில்
வறுமை தாண்டவமாடும் என்றும் பொருள்பட பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவில் கொண்டு அனைவரும் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.


அடுத்து உரையாற்றிய குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. பாலகிருஷ்ணன், முனைப்பு இயக்கத்தில் நேரடியாக ஈடுபட்டு, நடைமுறையில் உள்ள துன்பங்களை உணர்ந்தவன் என்றமுறையில், அரசு அலுவலர்களின் பணியை நினைத்துத் தாம் பெருமைப்படுவதாகவும், தங்கள் ஒன்றியம் அரும்பாடுபட்டுச் செயல்பட்டதாகவும் கூறினார். இன்னுமொரு பத்துப் பதினைந்து பேரை அதிகமாக அறுவைச் சிகிச்சைக்குள்ளாக்கியிருந்தால் பரிசுபெறும் வாய்ப்பைத் தங்கள் ஒன்றியமும் பெற்றிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டு, வருகிறஆண்டில் பரிசு பெறத்தக்க அளவுக்குப் பணியாற்றப்போவதாகவும், பரிசு பெறும் ஒன்றியங்களை உளமாரப் பாராட்டுவதாகவும் சொன்னார்.



சென்னையிலுள்ள இந்திய அரசின் விளம்பரத்துறை மண்டலத் துணை அலுவலர் திரு. இசக்கி பேசுகையில், படகு மிகுந்த சுமையோடு ஆற்றில் மிதக்கத் தொடங்கினால், இடையில் கவிழும் என்ற நியதிக்கொப்ப, வாழ்க்கைப் படகில் குழந்தைகளை அதிகமாக்கிக் குடும்பச் சுமையை மேலும் கூட்டிக்கொண்டே போனால், முழுமை வாழ்வு வாழ முடியாமல் இடையிலேயே வாழ்க்கைப் படகு கவிழ்ந்து விடும் என்பதை உணர்ந்து, எச்சரிக்கையோடு குடும்பநலத் திட்டம் போற்றி வாழ மக்கள் முன்வர வேண்டும் என்றார்.



திருவள்ளூர் நகராட்சித் தலைவர் திரு. நாராயணன் பேசுகையில், குடும்பநலத் திட்டம் பற்றி மக்களிடையே ஒரு பயம் இருக்கிறது என்றும், தாம் ஆறு குழந்தைகளுக்குத் தந்தையாகித் தொல்லைப் படுவதால் அனுபவத்தைக்கொண்டு அனைவரையும் ஒன்றிரண்டோடு நிறுத்திக் கொள்ளுமாறு வேண்டுவதாகவும், தாம் 1968-ஆம் ஆண்டே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதாகவும், அதனால் எந்தவிதமான தொல்லையும் ஏற்படவில்லையென்றும் கூறினார்.



அவரைத் தொடர்ந்து பேசிய மேலவை உறுப்பினர் திரு. வெங்கா, தம்முடைய துணைவிக்கும், தங்கைக்கும், தம் தம்பியின் துணைவிக்கும் அறுவைச் சிகிச்சை செய்து, அதனுடைய நல்ல பலனை அனுபவித்து வருவதாகக் கூறினார். முனைப்பு இயக்க காலத்தில் தீவிரமாகச் செயல்படுகிறோமே தவிர, சாதாரண காலத்தில் ஏன் அந்த வேகம்விறுவிறுப்பு இல்லை என்பதைக் கருத்தரங்கம் பரிசீலிக்க வேண்டுமென்றார். மேலும் இந்த இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களைத் தாங்களே முன்னோடியாக அமைத்துக் காண்பிக்க வேண்டுமென்றும், சிறு குழந்தைகளாக இருக்கும்போதே அவர்களுக்கு இத்திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தவேண்டுமென்றும், சாதாரண காலத்திலும் இத்திட்டத்தை விறுவிறுப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்றும் அவர் கூறினார்.



செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. யு. எஸ். நடராஜன் உரையாற்றுகையில், முனைப்பு இயக்க வெற்றிக்குத் துணை புரிந்த அனைத்துத்துறை அலுவலர்க்கும் நன்றிதெரிவித்துக் கொள்வதாகவும், மக்கள் தொகையில் ஒருசதவிகிதத்தினருக்கு நிரந்தரக் கருத்தடை செய்ய வேண்டுமென இந்திய அரசு இலக்கு நிர்ணயிக்க, அதையும் தாண்டி 32,420 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்திருக்கிறது, செங்கற்பட்டு மாவட்டம் என்றால், அது தனி மனிதரின் சாதனை அல்ல என்றும், எனவே அந்தச் சாதனைக்கு உழைத்த அலுவல் சார்பற்றவர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார். மேலும் அவர் பேசுகையில் குடும்பநலத் திட்டம் A way of life என மாறவேண்டும்—அதாவது அன்றாட வாழ்க்கை முறையிலே ஒன்றாக ஆகவேண்டும் என்று குறிப்பிட்டார். குழந்தை பிறந்ததும் மூன்றாவது வயதில் நர்சரி பள்ளி, ஐந்தாவது வயதில் பள்ளிக்கூடம், பத்தாவது ஆண்டில் உயர்நிலைப்பள்ளி, பதினாறாவது ஆண்டில் பள்ளி இறுதி வகுப்பை முடித்துக் கல்லூரி, பதினெட்டாவது வயதில் பி.ஏ. முடித்து வேலைக்குச் செல்லுதல் அல்லது எம்.ஏ. படித்தல், 23-வது வயதில் திருமணம், 27-வது வயதில் நிரந்தரக் கருத்தடை ஏற்றுக்கொள்ளுதல் என்ற நிலை ஒவ்வொருவருக்கும் இயல்பாகவே வரவேண்டும் என்று கூறினார். அப்படியொரு நிலை ஏற்பட்டால்தான் நாம் எதிர்காலத்தைப்பற்றி நிம்மதியாக இருக்க முடியுமென்றும், நமக்குள்ள பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு இவைகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்ட அவர், தமக்கு மூன்றே குழந்தைகள் என்பதாகவும், தாம் நிரந்தரக் கருத்தடையை ஏற்றுக்கொண்டு நிம்மதியாக வாழ்வதாகவும் சொன்னார்.



கருத்தரங்க முடிவில் செங்கை மாவட்டக் குடும்பநல விளம்பர அலுவலர் திரு. மெய்யப்பன் நன்றியுரையாற்றினர்.

திருமணத்துக்குப்பின் மனைவியிடம் கட்டுப்பட்டிருக்கும் சூழ்நிலை என்றும், வாழ்க்கையின் இறுதியில் முது



மைக்குக் கட்டுப்பட்டிருக்கும் சூழ்நிலை என்றும், பிறகு பிணமான பின்பு, எட்டடி நிலத்தில் கட்டுப்பட்டிருக்கும் சூழ்நிலை என்றும் சொல்லி, இப்படியெல்லாம் இயற்கை நமக்குக் கட்டுப்பாட்டை வைத்திருந்த போதிலும் கூட, மனிதன் திருமணத்திற்குப் பிறகு கட்டுப்பாடு இல்லாமல் அதிகக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை இருப்பதனுலேதான் உலகத்திலே எத்தனையோ தொல்லைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்று அவர் சொன்னர்.

குடும்பத்தை இரண்டே குழந்தைகளோடு சிறு குடும்பமாக அமைத்துக் கொண்டால் வாழ்வு வளமாக—சுகமாக இருக்கும் எனக்கூறி, அனைவருக்கும் நன்றி கூறினர். அதன்பின் கருத்தரங்கம் முடிவுற்றது.

மீண்டும் பிற்பகல் 3-மணியளவில் கருத்தரங்க உறுப்பினர்கள் நான்கு பெரும் குழுக்களாகப் பிரிந்து சென்று, கருத்தடைச் சாதனங்கள். கருத்தடை அறுவைச் சிகிச்சை, விளம்பரம், பணியாளர் கடமை, மகளிர் கடமை என்ற தலைப்புக்களில் குழு விவாதம் நடத்தினர். விவாதத்திற்குப் பின் நான்கு குழுக்களின் பரிந்துரைகளையும்தமிழ்நாடு குடும்பநலத்துறைத் துணை இயக்குநர் பொறுப்பிலிருக்கும் டாக்டர் டி. எம். லிங்கையா, தமிழ்நாடு குடும்பநலத்துறையின் நல்வாழ்வுக் கல்வி அலுவலர் திரு. இராஜ மாணிக்கம் ஆகியோர் ஒருங்கிணைத்து அறிக்கை தயாரித்தனர்.

மாலையில் மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் முனைப்பு இயக்க வெற்றி விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. யு. எஸ். நடராசன் வரவேற்புரையாற்றினர். அடுத்து தமிழ்நாடு குடும்பநலத்துறைத் துணை இயக்குநர் பொறுப்பிலிருக்கும் டாக்டர் டி. எம். லிங்கையா குழு விவாதங்களின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை வாசித்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு. பரந்தாமன், மேலவை உறுப்பினர் திரு. வெங்கா ஆகியோர் உரையாற்றினர்.

அடுத்து உரையாற்றிய திருவொற்றியூர் நகராட்சித் தலைவர் திரு. நாராயணசாமி, இத்திட்டத்



தைக் கண்டு மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும், தமிழ் நாட்டில் லட்சக்கணக்கானவர்கள் செய்து கொண்டு நலிவில்லாமல் வாழ்கிருர்கள் என்பதை உணர்ந்து, ஒவ்வொரு குடும்பமும் யாரும் வந்து சொல்லி அழைத்துச் செல்லவேண்டுமெனக் காத்திராமல், பந்திக்கு முந்துவது போல் நிரந்தரக் கருத்தடை ஏற்க முந்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. கோ. விசுவநாதன் பேசுகையில் குடும்பநலத் திட்டம் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் இலவச வசதிகளைச் செய்து தருகிறது என்றும், குறிப்பாகக் குழந்தைகளுக்கான தடுப்பு மருந்துகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன என்றும், அரசாங்கம் ஏற்படுத்தித்தந்துள்ள



வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது மக்களின் கடமை என்றும் கூறினர்.

காஞ்சிபுரம் நகராட்சித் தலைவர் திரு. கே. டி. எஸ். மணி உரையாற்றுகையில் குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் நகராட்சிகளும் தங்கள் பங்கைச் செலுத்தி வருகின்றன என்றும். நகராட்சியையும், நகராட்சி ஊழி



யர்களையும் ஊக்குவிக்கும் வகையில் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளில் சிறப்பாகப் பணியாற்றிய நகராட்சிகளுக்குப் பரிசுகள் வழங்க வேண்டும் என்றும் சொன்னர்.

சட்டமன்ற உறுப்பினர் கவி கா. வேழவேந்தன் பேசுகை விழாவில் பங்கு கொண்டு வர்கள் அனைவரும் இந்தக்குடும்பநலக் கருத்துக்கள் நாட்டுக்கு எவ்வளவு அவசரமாகத் தேவை என்பதை உணர்ந்து, மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தகுந்த இடைவெளிக்குப்



பின் ஒன்றிரண்டு குழந்தை பெற்றுக்கொண்டு நிரந்தரக் தடை ஏற்க வேண்டுமென் எதிர்க்கட்சியாக இருந்தபே இன்று நாட்டை ஆளும் வ புப் பெற்றுள்ள திராவிட னேற்றக் கழகம், குடும்ப திட்டக் கருத்துக்களை வலியு வந்திருக்கிறதென்றும் சொன்னர். வெற்றிவிழாக் வினர் மெத்த சிரமத்தோடு பெரிய மலரை வெளியிட் கிருர்கள் என்றும், அந்த பேராசிரியர் எழுதிய விளக்கும் ஆராய்ச்சி நூ போல இருக்கிறது என் அது எல்லோருடைய கை யும் தவழவேண்டும்—நூ களில் இடம்பெற வேண்டு றும் கூறினர்.

பிற்பட்டோர் நலத்து அமைச்சர் திரு. என். வி. நடர அவர்கள் தலைமை உரைய ஞர்.

இறுதியாகப் பரிசுகள் வ யும், மலரை வெளியிட்டும் ம நல்வாழ்வுத்துறை அமை பேராசிரியர் உரையாற்றினர்.

செங்கை மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் அண்ணமலை நன்றி உரையாற்றியபின் நாட்டு வாழ்த்துடன் விழா முடிவுற்றது.

*(—)*

159879

Printed and Published by Dr. P. R. Balakrishnan, Director of Health Services and Family Planning, at No. 49, Pantheon Road, Madras-8 — State Family Planning Press, No. 79-81, Anna Salai, Madras-6. Editor : K. G. Radhamanalan.